கல்யாண முகூர்த்தப் புடைவைகளின்
கைராசியான முன்னணி நிறுவனம்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கையர், ஆடவர் மனதைக் கொள்ளை கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு, பருத்தி புடைவைக் கடல்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 27 புதன்கிழமை (10 - 05 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 164

# 4 தாக்குதல் விமானங்கள், 2 கப்பல்கள்

# இரவலாக வழங்க இந்தியா முடிவு!

## மிகக் குறுகிய காலத்தில் இவை ஸ்ரீலங்கா வந்து சேருமாம்

கொழும்பு, மே. 10

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகள் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இராணுவ நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த நான்கு நவீனரக தாக்குதல் விமானங்களையும் இரண்டு கடற்படைக் கப்பல்களையும் இரவலாக வழங்க இந்தியா முன்வந்துள்ளது.

அவசர உதவியாக வழங்கப்படும் இவை மிகக் குறுகிய காலத்தில் ஸ்ரீலங்கா வந்து சேரும் என்றும் கூறப்படுகின்றது.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி "லங்கா தீப" சிங்கள வார இதழ் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இது இந்தியாவிலிருந்து ஸ்ரீலங்காவுக்குக் கிடைக்கும் இராணுவ உதவியின் முதற்கட்டமாகும்.

இந்தியா வழங்கவுள்ள இராணுவத் தளபாடங்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புல் வெட்டச் சென்றவர் படையினர் வேட்டுக்குப் பலி

யாழ்ப்பாணம், மே 10

மாட்டுக்கு புல்வெட்டச் சென்றவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

தெல்லிப்பளை 'மாத்தனைப் பகுதியில் நேற்று மாலை 4 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது.

மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து மல்லாகத்தில் வசிக்கும் இராசா சிவலோகநாதன் [31 வயது] என்பவரே மரணமடைந்தவர் ஆவார்.

படுகாயமடைந்து சுயநினைவிழந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரும்போது இவர் இடை வழியில் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டது

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (ஓ-7-13-15)

## எரிகுண்டு வீசி பற்றைகளை அழிக்கும் படையினர்!

யாழ்ப்பாணம், மே. 10

பலாலி இராணுவமுகாமைச் சூழவுள்ள பற்றைக்காடுகள் இராணுவத்தினரால் எரிகுண்டு வீசப்பட்டு அழிக்கப்பட்டுவருகின்றன.

தெல்லிப்பளை, மாத்தனை. கட்டுவன் பகுதிகளிலேயே இராணுவத்தினர் எரிகுண்டுகளை வீசி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதிகளில் நேற்று பெரும் தீச்சுவாலையும், புகை மண்டலமும் காணப்பட்டன. (ஓ-15)

## உல்லாசப் பயணத்துறை நிறுவன ஹெலியைக் கடத்த புலிகள் முயற்சி?

கொழும்பு: மே 10

உல்லாசப் பயணத்துறையின் முன்னணி வகித்து வரும் ஒரு நிறுவனத்துக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன்றை கொழும்புக்கு வெளியே உள்ள ஓர் இடத்திலிருந்து கடத்திச் செல்வதற்கு புலிகள் திட்டியிருந்ததாகக் கூறப்படும் திட்டம் பற்றிய தகவல்கள் தற்போது வெளிவந்துள்ளதாக சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் விமானப் படைப் பிரிவைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர் ஒருவர் இந்தத் திட்டத்தை நிறைவேற்றக் கொழும்புக்கு வந்துள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறது எனவும் —

இந்நிலையில் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான விமானங்கள், ஹெலிகள் ஆகியனவற்றுக்கு பாதுகாப்பளிப்பது தொடர்பான வழிவகைகள் காணப்படும் வரை அவற்றைப் பயன்படுத்துவதை தற்காலிகமாக நிறுத்த அதிகளவு வாய்ப்புகள் உள்ளன எனவும் —

பாதுகாப்புத் துறையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தகவல்தருவதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (உ-10)

## கொழும்பில் வெள்ளி இரவு

## "லொட்ஜ்" மனேஜரும் 7 யுவதிகளும் கைதாகினர்

கொழும்பு, மே 10

கொழும்பு ஹல்ஸ் டோர்ப் பகுதியிலுள்ள "லொட்ஜ்" ஒன்றின் முகாமையாளரும் (மனேஜரும்) வட பகுதியைச் சேர்ந்த ஏழு யுவதிகளும் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வாழைத்தோட்டப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு நிதி சேகரித்துக் கொடுப்பவர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே மேற்படி "லொட்ஜ்" முகாமையாளர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இவரிடம் ஒன்றரை லட்சம் ரூபா பணம் இருந்ததாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையே கொழும்பு நகரில் இடம்பெறும் தேடுதல் நடவடிக்கையின் போது தினமும் நூற்றுக்கும் அதிகமானோர் கைது செய்யப் படுவது குறிப்பிடத்தக்கது.

## தமிழர் கைது

கொழும்பு, மே 10

தேடப்பட்டு வந்த தீவிரவாத சந்தேக நபர் எனக்கூறப்படும் தமிழர் ஒருவரை கைது செய்துள்ளதாக மருதானைப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இவருடன் இணைந்து செயற்பட்டு வந்த வேறும் சிலரும் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

கைது செய்யப்பட்டவர் மருதானை, அப்புத்தளை, பொரளை பொலீஸ் பிரிவுகளினால் தேடப்பட்டு வந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ—5)

## சோறு, இறைச்சிக் கறி கேட்கும் படையினர்!

யாழ்ப்பாணம், மே. 10

பலாலி இராணுவத்தினருக்கு இறைச்சிக் கறியும், சோறும் கொடுத்தால் தான லொறிகளை வடக்கே செல்ல அனுமதிக்க முடியும் —

இவ்வாறு வவுனியா தடைமுகாம் இராணுவத்தினர் கூறுகின்றனராம்.

பலாலியில் உள்ள படையினருக்கு சோறும் இறைச்சிக் கறியும் வழங்கினால் தான், தடை ஏதுமின்றி யாழ்ப்பாணம் செல்ல லொறிகளை அனுமதிப்போம் — என்று அவர்கள் பொதுமக்களிடம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி யாழ்ப்பாணம் மாவட்டங்களுக்கு வருவதற்காக வவுனியாவில் பெருமளவு லொறிகள் காத்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஓ-4)

## சுப்பசொனிக் விமானங்கள் நேற்று பரந்தன் பகுதியில் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், மே. 10

கிளிநொச்சிப்பகுதியில் ஸ்ரீலங்கா விமானப்படையின் இரண்டு 'சுப்பசொனிக், விமானங்கள் நேற்று மாலை 5. 45 மணியளவில் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

இந்த விமானங்கள் வீசிய குண்டுகள் பரந்தன் பகுதியில் விழ்ந்து வெடித்தன என்றும் இதனால் மக்கள் குடியிருப்புக்கள் பல சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலதிக சேதவிவரங்கள் குறித்து இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை. (ஓ-7)

## அரசியல் தீர்வு குறித்து தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு

### முதலாவது சந்திப்பு 17 இல்

கொழும்பு, மே 10

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் தனது முயற்சியாக, ஜனாதிபதி சந்திரிகா கொழும்பில் உள்ள தமிழ்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்டின் அரசியல் கட்சி), ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளை சந்திரிகா பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முதலாவது சந்திப்பு இம்மாதம் 17 ஆம் திகதி நடைபெறும் என்றும் அப்போது அரசாங்கத்தின் உத்தேச தீர்வுத் திட்டம் எது என்பதை சந்திரிகா அவர்களுக்கு விளக்குவார் என்றும் கூறப்படுகிறது. (அ)

## வானொலி லைசென்ஸ் வழங்கல் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 10

வானொலிப் பெட்டிகளுக்கான உத்தரவுப் பத்திரங்களை [லைசென்ஸ்] வழங்கும் நடவடிக்கைகளை தமிழீழ நிர்வாக சேவையினர் நாளை ஆரம்பிக்க உள்ளனர்.

தமிழீழ நிர்வாக சேவையின் உள்ளூராட்சிப் பகுதியிலோ அல்லது அவ்வப்பகுதி சார்ந்த உள்ளூராட்சி மன்றங்களிலோ அலுவலக நேரங்களில் வானொலி உத்தரவுப் பத்திரங்களை வழங்க ஏற்பாடு செய்துள்ளதாக தமிழீழ நிர்வாக சேவையினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழீழ நிர்வாக சேவை நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வானொலிப் பெட்டிகளை வைத்திருப்போர் அவற்றுக்கான உத்தரவுப் பத்திரங்களை எதிர்வரும் ஜூன் மாதம் பத்தாம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

வானொலிப் பெட்டி திருத்த உரிமையாளர்கள் இம்மாதம் 25 ஆம் திகதிக்குப் பின்னர் திருத்தங்களுக்காகப் பெறும் வானொலிப் பெட்டிகளுக்கான உத்தரப் பத்திரங்களுக்குரிய இலக்கங்களை பற்றுச் சீட்டுக்களில் பதிந்து பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

எக்காரணம் கொண்டும் தமிழீழ நிர்வாக சேவையின் அறிவுறுத்தல்களுக்கு மாறாக

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவு, பூநகரி முகாம்களை தாக்குவதற்குப் புலிகள் திட்டமாம்!

### பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு. மே 10

ஆனையிறவு. பூநகரி போன்ற வடபகுதி இராணுவ முகாம்களைத் தாக்குவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியதாகச் செய்திகள் தெரிவித்தன.

படையினரின் முகாம்களை தாக்குவதற்கென விசேடமாக அமைக்கப்பட்டுள்ள தற்கொலைப் படையினரையும், இராணுவப் பிரிவைச் சேர்ந்த போராளிகளையும் விடுதலைப் புலிகள் தயார் நிலையில் வைத்துள்ளனர் என்றும் அந்த வட்டாரங்கள் கருதுவதாக அச் செய்திகள் மேலும் தெரிவித்தன

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க பாதுகாப்புப் படையினர் தயாராக இருப்பதாகவும். பதில் தாக்குதல் நடத்த தயாராக இருப்பதாகவும் படை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளுடன் மோதுவதற்குத் தேவையான நவீனரக ஆயுதங்கள் பலவும் தம்மிடம் இருப்பதாக இராணுவத்தரப்பினர் தெரிவித்தனர். (ஓ-5)

## ஹஜ் பெருநாள் தமிழீழ விடுமுறை

யாழ்ப்பாணம், மே 10

நாளை வியாழக்கிழமை ஹஜ் பெருநாள் தினம் தமிழீழ விடுமுறையாகக் கணிக்கப்படுவதாக தமிழீழ நிர்வாக சேவையினர் அறிவித்துள்ளனர். (ஓ)

### கொழும்பில் நடத்த திட்டமிட்டுள்ள

## புலிகளின் தாக்குதல் இலக்கு விவரம் புலனாய்வுபிரிவுக்கு கிடைத்துள்ளதாம்

கொழும்பு. மே 10

கொழும்பில் புலிகளின் தாக்குதல் பட்டியலில் உள்ள பன்னிரண்டு இலக்குகளின் விவரங்கள் தமக்கு கிடைத்திருப்பதாக பொலீஸ் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொலீஸ் தலைமையகம், குற்றக் கண்டுபிடிப்பு பணியகம். கடற்படைத் தலைமையகம் ஜனாதிபதி செயலகம். படையினர் தங்கும் விடுதிகள், கொழும்புத் துறைமுகம் மற்றும் பல அமைச்சுக்களின் செயலகங்கள் என்பன இந்தப் பட்டியலில் அடங்குவதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கேந்திர நிலையங்களின் பாதுகாப்பு தற்போது இரட்டிப்பாக்கப் பட்டிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மூன்றரை மாத கால மோதல் தவிர்ப்பு வேளையில் கொழும்பில் உள்ள முக்கிய கேந்திர நிலையங்கள் மற்றும் இடங்களை புகைப்படம் எடுப்பதற்கு புலிகள் பல்வேறு தந்திரங்களைப் பயன்படுத்தியதாகவும் பொலீஸ் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்தன.

கொழும்பு நகரில் உள்ள முக்கிய கட்டடங்களைப் படம் எடுத்த ஆறு விடுதலைப் புலிகளை இந்தக் காலகட்டத்தில் பொலீஸார் கைது செய்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



## தற்கொலைப் படைப் பிரிவு அமைக்க ஸ்ரீலங்கா அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, மே. 10

ஸ்ரீலங்கா அரச படைகளில் தற்கொலைப் படைப் பிரிவு ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கத்துக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் படை வீரர்கள் சங்கத்தினர் இந்த ஆலோசனையை வழங்கியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளை வெல்ல வேண்டுமானால் ஸ்ரீலங்கா அரச படைகளும் தற்கொலைப் படைப் பிரிவு ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் —

"இரண்டாவது உலகப் போரில் ஜப்பானிய இராணுவம் "காமிகாஸா" என்ற தற்கொலைப் படையை அமைத்து வெற்றிகரத் தாக்குதல்களை நடத்தியதாகவும் — அந்த ஆலோசனையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தங்கள் ஆலோசனையை ஏற்று தற்கொலைப்படை ஒன்றை அரசு அமைக்குமானால், தங்கள் உறுப்பினர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## படையினருக்கு 9 மாத குறுகிய காலப் பயிற்சி

சமீபத்தில் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சையில் தெரிவானோர் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர். இவர்களுக்கு ராணுவத்தில் ஒன்பது மாதகாலப் பயிற்சி அளிக்கப்படும்.

இராணுவத்தில் 10 ஆயிரம் பேரைச் சேர்ப்பதற்கான இந்த நேர்முகப்பரீட்சை கொழும்பிலும் வெளியிடங்களிலும் அமைக்கப்பட்டிருந்த 5 நிலையங்களில் கடந்த 2 ஆம் திகதி முதல் நடத்தப்பட்டது தெரிந்ததே —

இதனையொட்டி "இராணுவத்தில் சேர்ந்து நாட்டைக் காக்க இளைஞர்களுக்கு அரிய சந்தர்ப்பம்" என்ற வாசகத்தைக் கொண்ட வர்ண சுவரொட்டிகள் சகல இடங்களிலும் ஒட்டப்பட்டிருந்தன. (இ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா இராணுவ, அரசியல் தலைவர்களுக்கு ஏவுகணைத் தாக்குதல் அதிர்ச்சி அளித்திருக்காது!

தமிழீழ விடுதலைப் புலிகள் நிலத்திலிருந்து விண்ணுக்கு ஏவும் (சாம்) ஏவுகணைகளைப் பெற்றிருப்பது பத்தாண்டு கால யுத்தத்தில் தீர்க்கமானதோர் புதிய கட்டத்தைக் குறிக்கிறது.

கடந்த இரண்டு வாரங்களில் விடுதலைப் புலிகள் ''சாம்'' ஏவுகணைகளைப் பாவித்திருப்பது நாட்டு மக்களுக்கு ஆச்சரியத்தைத் தந்திருந்தாலும் அது ஸ்ரீலங்காவின் அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்க முடியாது.

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட விமானப்படை உளவுப் பிரிவு கடந்த ஆண்டு ஜூன் மாதம் விடுதலைப் புலிகளின் வான் திறன் பற்றி ஓர் முக்கிய ஆய்வைச் செய்தது.

விடுதலைப் புலிகள் தமது வான் திறனைத் தீவிரமாக விருத்தி செய்கிறார்கள் என்று அந்த ஆய்வு முடிவு செய்தது.

விமானப்படைத் தலைவர் ஒலிவர் ரணசிங்காவின் தூரதிருஷ்டி காரணமாக ஸ்ரீலங்கா விமானப்படையைத் தாக்கும் விடுதலைப் புலிகளின் திறன் பற்றியும் ஆய்வு கவனம் செலுத்தியது.

இரண்டு விமானங்கள் தாக்கப்பட்டு 94 படையினர் கொல்லப்பட்ட பின்னர் —

விமானப்படையினதும் பாதுகாப்பு அமைச்சினதும் உயர் மட்டத் தலைவர்கள் விடுதலைப் புலிகள் ஏற்படுத்திய அச்சுறுத்தலை சமாளிக்க அரசாங்கத்தின் திறனை விருத்தி செய்ய போதிய முன்னேற்பாடுகள் செய்யவில்லை என்பது —

இரண்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டு, 94 படையினர் கொல்லப்பட்ட பின்னர் உறுதியாகியிருக்கிறது.

மேற்படி ஆய்வின் முடிவுகளைப் பாரதூரமாகக் கவனத்தில் எடுத்து, எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் இந்த இரட்டை சோக சம்பவங்கள் இடம்பெற்றிருக்கமாட்டா.

மேற்குறிப்பிட்ட ஆய்வின் முடிவில் ஐந்து முக்கிய அம்சங்கள் வெளியாகின.

### முதலாவது

முதலாவதாக, லண்டனிலும் பாரிஸிலும் உள்ள தனிப்பட்ட போதனாசிரியர்களின் உதவியுடன் விடுதலைப் புலிகள் தமது வான் திறனை

> 'புலி ஏவுகணைகளின் பின்னால் உள்ள கதை'' என்ற தலைப்பில் 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழின் பாதுகாப்பு ஆய்வாளர் எழுதிய கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது

விருத்தி செய்துகொண்டிருந்தார்கள். விடுதலைப் புலிகள் ''அல்ட்ரா லைற்ஸ்'' எனப்படும் — ஒரு விமானியுடன் கூடிய — பாரம் குறைந்த விமானங்களை பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகியவற்றிடமிருந்து கொள்வனவு செய்தனர் பிந்திய ஒரு தகவலின்படி மொஸ்கோவிலிருந்தும் விமானம் ஒன்றை வாங்க விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருந்தனர்.

### இரண்டாவது

இரண்டாவதாக சங்கர் என்ற சொர்ணலிங்கத்தின் தலைமையில் புலோப்பளைக்கு வடக்கில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் விடுதலைப் புலிகள் தமது முதல் தொகுதி வான் புலிகளுக்குப் பயிற்சி அளித்துக்கொண்டிருந்தார்கள். கனடாவில் விமான, விமான அமைப்புப் பொறியியல் பட்டம் பெற்ற இரட்டைப் பொறியியலாளரான சொர்ணலிங்கம் கனடாவிலிருந்து வந்தவர். அவர் விடுதலைப் புலிகளின் உள் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவும், பின்னர் வான், கடல் திட்டமிடுதலுக்கும் பொறுப்பாகவும் இருந்தவர். அவர் இராணுவ நடவடிக்கைப் பகுதியின் ஆலோசகராகவும் கடமையாற்றியவர்.

சங்கரின் ஒரு நண்பர் இந்த முகாம் பற்றிய விவரங்களை 1993 ஆம் ஆண்டில் வெளியாக்கினார்.

இத்தகவலின் அடிப்படையில் ஸ்ரீலங்கா விமானப்படை 1993 ஒக்ரோபர் கிளாலி ஒப்டரேஷனின் போது இந்த முகாமுக்குக் குண்டு பொழிந்தது.

முதல் தொகுதி வான் புலிகளுக்கு சாம் ஏவுகணைகளைப் பாவிப்பது, விமானங்களைச் சீர்குலைப்பது, கட்டுப்பாட்டு அறைகளின் அமைப்பு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது.

### மூன்றாவது

மூன்றாவதாக, விடுதலைப் புலிகள் தமிழ்நாடு ஊடாக ஸ்ரீலங்காவுக்கு விமானத் தளபாடங்களைக் கொண்டுவந்து பொருத்தினார்கள். தற்கொலைத் தாக்குதல் நடவடிக்கைகளில் விமானங்களைப் பயன்படுத்த அவர்கள் திட்டமிட்டார்கள். அரசியல், பொருளாதார இராணுவ இலக்குகளைத் தாக்குவதே அவர்களின் நோக்கம் ஆகும்.

உளவுப் பிரிவினரால் கடும் பிரயாசைப்பட்டு பெற்ற தகவலின் அடிப்படையில் விமானப்படை கிளிநொச்சிப் பிரதேசத்தில் விமானத் தளம் ஒன்றைக் கண்டுபிடித்து, 1994 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அதற்குக் குண்டு பொழிந்தது.

இதற்குப் பின்னர் வட ஸ்ரீலங்காவில் உள்ள அறியப்படாத இடம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இரண்டாவது விமானத்தளம் ஒன்றை அமைப்பதில் ஈடுபட்டார்கள்.

### நான்காவது

நான்காவதாக, விடுதலைப் புலிகள் தமது முதலாவது தொகுதி நிலத்திலிருந்து விண்ணுக்கு ஏவும் ஏவுகணைகளை ஆப்கானிஸ்தானிடமிருந்து 1986 இல் கொள்வனவு செய்தார்கள். ஆனால் அவர்கள் ஏமாற்றப்பட்டார்கள். சுடும் உபகரணம் இன்றி ஏவுகணைகள் விற்கப்பட்டன விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாணத் தளபதி கிட்டுவின் அப்போதைய உதவியாளராக இருந்த ரஹீம் என்ற பாலசுப்பிரமணியம் கனகரத்தினத்தின்படி சிங்கப்பூருக்கு வெளியே செயற்படும் ஓர் ஆயுத விற்பனையாளரிடமிருந்து இன்னொரு தொகுதி ஏவுகணைகள் கொள்வனவு செய்யப்பட்டன. ஆனால் [illegible]

வெடிக்கத் தவறின.

### ஐந்தாவது

ஐந்தாவதாக, விடுதலைப் புலிகள் சாம் ஏவுகணைகளைப் பாவிப்பது பற்றிய பயிற்சியை 1987மார்ச் மாதத்தில் பெற்றுக் கொண்டனர். ஒருதொகுதி விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு விமான எதிர்ப்புப் பயிற்சி இந்தியாவின் 'றோ' அமைப்பால் வழங்கப்பட்டது. வெளிநாட்டு உளவுக்காக இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டது.

கொழும்பில் பிரசுரிக்கப்பட்ட றோகன் குணரத்னவின் ''ஸ்ரீலங்காவில் இந்தியத் தலையீடு'' என்ற நூலின்படி, இப்பயிற்சி வட இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு மட்டுமல்லாமல் புளொட், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ் (தேவானந்தா, பத்மநாபா கோஷ்டிகள்) ஆகியவற்றுக்கும் யாழ்ப்பாணத்தை ஸ்ரீலங்கா அரசாங்கம் கைப்பற்றுவதைத் தடுப்பதற்காக வழங்கப்பட்டது.

பின்னர் விடுதலைப் புலிகள் மத்திய கிழக்கிலிருந்தும் சோவியத் யூனியனின் பிரிந்த நாடுகளிலிருந்தும் வடகொரியாவிலிருந்தும் சாம் ஏவுகணைப் பயிற்சிகளைப் பெற்றார்கள்.

இந்த விஷயங்களை சீர் செய்யாவிட்டால் வடகிழக்கில் சக்தி விடுதலைப் புலிகளுக்கு சாதகமாகவே இருக்கும்.

### தேசிய உளவு சபையும் அறிவித்தது

விமானப்படை பெற்றுக்கொண்ட உளவு தவிர, தேசிய உளவு சபையும் விடுதலைப் புலிகள் 1995 இல் வான் திறன் பெறுவார்கள் என்று மீண்டும் மீண்டும் அறிவித்தது. வெளிநாட்டு வட்டாரங்கள் கூறியவற்றையும் விசாரணையின்போது, கொழும்பில் கைது செய்யப்பட்ட மகேஸ்வரன் என்ற புத்திஜீவி கூறியதையும் வைத்து அது இவ்வாறு அறிவித்தது.

விடுதலைப் புலிகளின் திட்டங்களை இவர் வெளியாக்கினார்.

தேசிய உளவு சபையின் விருப்பத்துக்கு மாறாக, சி. ஐ. டி. காவலில் இருந்த மகேஸ்வரன் விடுவிக்கப்பட்டார். மகேஸ்வரனைத் தடுத்து வைத்திருக்க ஸ்ரீலங்காச் சட்டத்தில் இடம் இல்லை எனவும்— சட்டத்தை மாற்ற சி. ஐ. டியினர் அரசாங்கத்தைப் போதியளவு நிர்ப்பந்திக்கவில்லை எனவும் சி. ஐ. டியினர் பின்னர் வெளிப்படுத்தினர்.

விடுதலைப் புலிகளை எதிர்த்து சமாளிப்பதற்கு— மகேஸ்வரனும் மற்றவர்களும் அளித்த தகவல்களை சரியாகப் பயன்படுத்த பாதுகாப்பு அமைச்சு தவறிவிட்டது.

### தவறு எங்கே?

தவறு உளவிலும் அல்ல; தரைப்படைகளிலும் அல்ல; காத்திரமான இராணுவக் கொள்கை, தலைமை, யுத்த தந்திரம் ஆகியவை இன்மையிலேயே தவறு இருக்கின்றது. கடந்த இரண்டு வார நிகழ்வுகள் இதை நன்கு நிரூபிக்கின்றன.

விடுதலைப் புலிகளிடமிருந்து கெரில்லா யுத்தம் ஒன்றில் பிரதேசத்தைப் பிடிப்பதே ஸ்ரீலங்காப் பாதுகாப்புப் படைகளின் இராணுவக் கொள்கையாக இருந்துள்ளது. இந்தக் கொள்கை தவறானது.

கெரில்லா யுத்தம் ஒன்றில் (1) இயன்றளவு குறுகிய காலத்தில் மிகக் குறைந்த வளங்களைப் பயன்படுத்தி மிகக்கூடிய தொகை எதிராளிகளைக் கொல்வது (II) சொந்த ஆட்களைக் குறைவாகப் பலி கொடுப்பது ஆகியனவே யுத்த தந்திரமாக அமையவேண்டும். (உ)

## ஆலயங்களில்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான மணவாளக்கோலத் திருவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறும். (உ)

★ ★ ★

யாழ். அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு ஆலய பரிபாலன சபையினர் திருமுறை மனனப் போட்டிகளையும், சமய அறிவுப் போட்டிகளையும், அண்மையில் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு வெகுமதி மிக்க பரிசில்களை வழங்க உள்ளார்கள்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். (உ-30)

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயிலில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு ஏகாதசி விசேட அபிஷேகம் நடைபெறும். (உ-30)

## புலிகளின் குரல் வானொலியில்

10 – 05 – 1995

**புதன் இரவு**

- ★ 8-02 — குயிலோசை— நிகழ்ச்சியில் 'ஆணையை அடக்கிய அரியாத்தை' நாட்டுக்கூத்தின் 3ஆம் பகுதி
- ★ 8-20 —வாத்திய கானங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம் — இ. செல்வரட்ணம் எழுதிய ''அக்கரைகள் பச்சையில்லை'' என்பன இடம் பெறும்.

11 — 05 — 1995

**வியாழன் காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — விடுதலைகீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 விடுதலைகீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம்பெறும்.

## தமிழீழ வானொலியில்

**புதன் மாலை**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — படப்பாடல்கள்
- ★ 5-30 — அறிவூற்று
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 6-30 டுடன் மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## 8ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சபாபதி நாகராசா**

[விநாயகர் அரிவுத் தொழிற்சாலை உரிமையாளர்]

தோற்றம்: 8-4-1930 மறைவு: 8-5-1987

**திதி இன்று — 10-5-1995**

அன்பின் பிறப்பிடமே!
அரவணைக்கும் எமதுயிரே
பாரினிலே பல முகங்கள்
பழகி வந்த போதினிலும்
களங்கமில்லா அன்பு முகத்தை
காணாது தவிக்கின்றோம்
உங்கள் உயர்ந்த பண்புகளால்
உவகை கொண்ட இறைவன்
தன்னருகே உமைவைக்கத்
தானங்கு அழைத்தானோ!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி. பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

பிரதான வீதி,
சங்கானை.

(36588)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 12 — 08 — 1939



உதிர்வு: 10 — 04 — 1995

அமரர்

**சின்னப்பொடி சண்முகலிங்கம்**

கண்ணுக்கினியாயென் கருத்துக்கினியாய் – நீ
விண்ணுக்கினியனாகி விட்டாய் – மண்ணில்
இனியெம்மைக் காப்பாற்ற இவ்வுலகில் – யாருளர்
தணியாதோ எம் துயரந்தான்

இன்று (10 – 05 – 1995) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மருமக்கள்.

இல: 243, காரைநகர் வீதி,
நவாந்துறை,
யாழ்ப்பாணம்.

(36585)


**BITSMANS**
கல்வி நிறுவனம்
மானிப்பாய்

**A/L 97**

அளவையியல்
S. S. மனோகரன்

ஆரம்பம்;
11 — 05 — 1995
வியாழன் 5-00 p. m.

நேர அட்டவணை
செவ். வியா. 5-00

[சி-1176]


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை

## புதிய மாணவர்களைப் பதிவு செய்தல்

**கல்வியாண்டு 1994 / 1995**

புதிதாக அனுமதி பெற்ற மாணவர்கள் கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் பின்வரும் ஆவணங்களுடன் நேரில் வந்து யாழ். பல்கலைக்கழகத்தின் பரீட்சைகளுக்கு / அனுமதிகளுக்கு கிளையில் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

விஞ்ஞான பீடம்,
விவசாய பீடம் — 1995-05-23

மருத்துவபீடம்,
முகாமைத்துவ கற்கை நெறி — 1995-05-24

கலைப்பீடம் — 1995-05 25

வணிகத்துறை — 1995-05-26

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் கிடைக்கப்பெற்ற அனுமதிக் கடிதம்.
2. பிறப்புச் சான்றிதழ்
3. பாடசாலை விடுகைப் பத்திரம் ) மூலப்பிரதி + நிழற்பிரதி
4. தேசிய அடையாள அட்டை
5. 8 புகைப்படங்கள் — 2'' X 2½''
6. கட்டணம்:
   - விஞ்ஞான பீடம் — 305/-
   - விவசாய பீடம் — 275/-
   - கலைப்பீடம் — 175/- (புவியியலை ஒரு பாடமாக எடுப்பவர்கள் ஆய்வுகூடக் கட்டணமாக 100/- செலுத்த வேண்டும்.)
   - மருத்துவபீடம் — 350/-

பதிவாளர்

(சி-1187)

## தென்னிந்திய திருச்சபை குரு அபிஷேகம்

வட்டுக்கோட்டை, மே. 10

தென்னிந்திய திருச்சபை யாழ் அத்தியட்சாதீனத்தைச் சேர்ந்த நால்வர் இன்று புதன் காலை 8-30 மணிக்கு வட்டுக்கோட்டை ஆசன ஆலயத்தில் குருவானவர்களாக திருநிலைப்படுத்தப்பட உள்ளனர்.

சத்தியபுரம், ஆனைக்கோட்டை தேவாலயங்களின் ஊழியரான ஐ. அருள்பாலன் அராலி, மூளாய் தேவாலயங்களின் ஊழியரான அன்ரனி செபஸ்ரியன், நெடுந்தீவு தேவாலய ஊழியரான என். ரி. ஜெயநேசன், குடத்தனை தேவாலய ஊழியரான ரி. ஈ. அசோக்குமார் ஆகியோரே இந்த நால்வரும் ஆவர்.

அதிவணக்கத்துக்குரிய பேராயர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் அவர்களால் குரு அபிஷேகம் நடத்தி வைக்கப்படும். (இ-161)

## தொலைக்கல்வி மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், மே 10

தெல்லிப்பளை தொலைக்கல்வி நிலைய முதலாம், இரண்டாம் வருட மாணவர்களை இன்று புதன்கிழமை நிலையத்துக்கு சமுகம் தரும்படி சிரேஷ்ட போதனாசிரியர் அறிவிக்கின்றார்.

போதனை வகுப்புகளும் மாதிரி முன்னோடிப் பரீட்சைகளும் நடைபெறும் எனவும்— நாடகமும் அரங்கியலும் போதனை] முற்பகல் வேளை நடைபெறும் எனவும் —

ஏனைய நிலை மாணவரும் இதில் பங்கு கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்படுகிறது.

## 'வணிக தென்றல்' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், மே 10

இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி வணிக மாணவர் மன்றத்தின் வணிகத் தென்றல் சஞ்சிகை வெளியீடு நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியில் தற்காலிகமாக அமைந்திருக்கும் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

## காங்கேசனில் தவம் கிடக்கும் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், மே 10

கொழும்பில் தேங்கிக் கிடந்த தபால் பொதிகள் தற்போது காங்கேசன்துறையில் தவம் கிடக்கின்றன.

'லங்கா முதித' கப்பலில் எடுத்து வரப்பட்ட 473 வட பகுதி தபால் பொதிகளுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இக்கப்பலில் தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டு நீண்ட நாட்கள் ஆகியும் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் தாமதமடைவதால் தபால் இறக்குவதும் தாமதமடைந்து வருகிறது. (இ-4)


## 22-து பிறந்ததின வாழ்த்து

★ செல்வன் ப. சசிசேகரன் ★

கொக்குவிலைச் சேர்ந்த ப சசிசேகரன் (நவாலி) தனது பிறந்ததினத்தை இன்று (10 – 05 – 95) விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை எல்லா நலனும் பெற வாழ்த்துகின்றோம்.

— நண்பர்கள்.

(36586)


கொக்குவில்- நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வழிபடுவோர்

## மகாசபைக் கூட்டம் 27- 5- 1995

மேற்படி கூட்டம் 27 – 05 – 1995 சனிக்கிழமை பி. ப. 4 00 மணியளவில்; சபைத் தலைவர் திரு. க. இராமநாதன் அவர்கள் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் சென்றால கணக்கறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். அத்துடன் நடப்புவருட பரிபாலனசபை உறுப்பினர்களும் தர்மகர்த்தாக்கள் தெரிவும் நடைபெறும். பிரேரணைகள் அனுப்ப விரும்பும் அங்கத்தவர்கள் 16- 5- 1995 செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக சபைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கும்படி தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் அங்கத்தவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நன்றி

சி. ஜெயபாலசிங்கம்
கௌரவ செயலாளர்

கொக்குவில், நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள் ஆலய
பரிபாலனசபை

(36587)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவ விசாரணைக்கும் தயார்
# ஆனால் விமானம் ஓட்ட மாட்டோம்!

## படையினர் பிடிவாதமாக மறுப்பு

கொழும்பு மே 10
வடக்கு—கிழக்குப் பகுதிகளுக்கு விமானங்களை ஓட்டுவதற்குத் தாம் தயார் இல்லை என்றும் இராணுவ நீதி மன்ற விசாரணைக்கு தம்மை உட்படுத்தினாலும் கூட தாம் தமது முடிவை மாற்றப்போவதில்லை என்றும் விமானப் படையினர் தெரிவித்து விட்டனராம்.

இதனை அடுத்து மாற்றுத் திட்டம் குறித்து அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செய்து வருவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் வடபகுதியில் தமிழ்ப் போராளிகளிடம் ஏவுகணைகள் இருப்பதனால் உலக நாடுகள் அப் பிராந்தியத்தின் மேலாக விமானங்களைச் செலுத்த வேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளன.

இந்த நிலையில் படையினர் மட்டும் எப்படி விமானங்களை அப்பிராந்தியத்தின் மேலால் செலுத்த முடியும் என்று விமானப் படையினர் கேள்வி எழுப்பி வருகின்றனர் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த 28 ஆம் திகதியும் 29 ஆம் திகதியும் அடுத்தடுத்து இரு 'அவ்ரோ' விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன அல்லவா?

இதில் முதலாவது விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக விபத்துக்குள்ளாகி விழுந்தது என்றும்—

இரண்டாவது விமானம் மட்டுமே புலிகளின் ஏவுகணைத் தாக்குதலினால் விழுந்தது என்றும் விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்கா புதிய பாணியிலான கதை ஒன்றைச் சொல்லி வருகிறார்.

முதலாவது 'அவ்ரோ' விமானம் சுடப்பட்டது பற்றிய விசாரணை நடத்த முன்னர் இரண்டாவது அவ்ரோ விமானத்தை அனுப்பிய பழியில் இருந்து தப்பாவே எயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்கா இப்படிக் கூறி வருவதாக கொழும்புப் பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

(இ)

# சமஷ்டி ஆட்சிக்கு இதுவே ஏற்ற தருணம்

## ஹரி குணதிலக்க கூறுகிறார்

கொழும்பு. மே. 10
தமிழ் மக்கள் விரும்பும் சமஷ்டி அமைப்பை வழங்குவதற்கான தருணம் இதுவே.

முன்னாள் விமானப் படைத்தளபதி ஹரி குணதிலக்க மேற்கண்டவாறு தெரிவித்ததாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 28 ஆம் திகதி ஏவுகணை தக்குதலுக்கு உள்ளான விமானத்தை ஓட்டி வந்த கட்டளை இடும் அதிகாரியான ஸ்ரீயந்த குணதிலக இவரின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

தாக்குதல் சம்பவத்தில் ஸ்ரீயந்த உட்பட விமானத்தில் வந்த அனைவரும் கொல்லப்பட்டனர்.

(இ-14)

# ஜெனரேற்றர் எடுத்துவர படையினர் அனுமதி மறுப்பு

வடமராட்சி, மே 10
கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்திற்கென 25 கிலோவாட்ஸ் வலு கொண்ட ஜெனரேற்றர் ஒன்றை கப்பலில் எடுத்துவர எடுத்த முயற்சி அதற்கான அனுமதி மறுக்கப்பட்டதால் கைகூடவில்லை.

இந்த நிலையத்தின் தேவைக்கென இயந்திரங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் என்பவற்றுடன் ஜெனரேற்றர் ஒன்றையும் தருவிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும் கப்பலில் ஜெனரேற்றரை ஏற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

அதனை அடுத்து இயந்திரங்களும், உபகரணங்களும் மட்டுமே கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

வேலை நிறுத்தம் காரணமாக

# நோயாளர்கள் சிரமம்; படையினரும் அவதி!

கொழும்பு, மே. 10
துணைமருத்துவ சேவையில் உள்ள தொழிற்சங்கங்கள் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தத்தால் நோயாளர் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி உள்ளனர்.

புற்று நோயாளர் வைத்திய சாலையில்உள்ள நோயாளர்கள் இந்த வேலை நிறுத்தம் காரணமாக மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு வைத்தியசாலைகளிலும் அனுமதிக்கப்பட்டுள்ள, இராணுவத்தினரும் உரிய சிகிச்சை கிடைக்காமல் திண்டாடுகின்றனர்.

அனுராதபுரம், பொலன்னறுவ அம்பாறை ஆஸ்பத்திரிகள், வேலை நிறுத்த நடவடிக்கையினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சந்தர்ப்பத்தில் தமது கோரிக்கைகள் கைகூடுவதற்காக வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது மிகவும் அநீதியான செயல் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் கண்டித்துள்ளன.

இஸ்ரேல் - பலஸ்தீன

# சமாதான ஒப்பந்தம் முறிந்து விடும் நிலையில்

கொழும்பு, மே 10
பாலஸ்தீனத்தின் விடுதலை இயக்கத்துக்கும், இஸ்ரேலுக்கும் இடையில் கடந்த ஆண்டு கைச்சாத்தான சமாதான ஒப்பந்தம் தற்போது முறிந்து போகக் கூடிய நிலை தோன்றியுள்ளது.

கிழக்கு ஜெருசலேமில், பாலஸ்தீனருக்குச் சொந்தமான பகுதியில் யூத இன மக்களை குடியமர்த்துவதற்கு இஸ்ரேல் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளே, இந்த சமாதான ஒப்பந்தம் சிதைந்து போய்விடக்கூடிய நிலைமையை உருவாக்கியுள்ளது

இத் திட்டத்தை மறுபரிசீலனை செய்யுமாறு அரபு லீக் இஸ்ரேலைக் கேட்டுள்ளது.

இஸ்ரேல் மக்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இந்த நிலப்பரப்பு தனக்கு தேவைப்படுவதாக இஸ்ரேல் தெரிவித்து விட்டது.

(ஓ-5)

# அங்கோலாவில் போருக்கு முடிவுகட்டுவதற்கு உறுதி

லுஸாக்கா மே 10
அங்கோலாவின் கடந்த 20 வருட கால உள்நாட்டுப் போருக்கு முடிவுகட்டுவதற்கு அந்த நாட்டின் தலைவர்கள் உறுதி அளித்துள்ளனர்.

அங்கோலா ஜனாதிபதி 'ஜோர்ஜ் எட்வடோர் டொஸ்' சான்டோஸ்ம், யுனிட்டா இயக்கத்தலைவர் சாவிம்பியும் சாம்பியாவின் லுஸாக்காவில் பேச்சுகளை நடத்தினர்.

மூன்றாண்டுகளின் பின்னர் சந்தித்த இவர்கள் 40 நிமிட நேரம் பேச்சுக்களை நடத்தினர்.

அங்கோலாவில் தாம் மீண்டும் சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளதாக செய்தியாளர்களிடம் அவர்கள் தெரிவித்தனர்.

1975 ஆம் ஆண்டு போர்த்துகல்லிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் இடம்பெற்ற உள்நாட்டுப் போரினால் அங்கோலாவில் இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தும் இடம்பெயர்ந்தும் உள்ளனர்.

(க-14)

வீட்டிலே தோட்டம் செய்தால்
நாட்டிலே பசி தீரும்

பல்கலைக் கழக ஆசிரியர்களின்

# தொழிற் சங்க நடவடிக்கைகளை கைவிட அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, மே. 10
தொழிற்சங்க நடவடிக்கைகளை கைவிட்டு பல்கலைக் கழகங்களின் சுமுகமான செயல்பாட்டுக்கு உதவும்படி கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரன பல்கலைக்கழக ஆசிரியர் தொழிற்சங்கத்தை கேட்டுள்ளார்.

தொழிற்சங்க நடவடிக்கைகள் பட்டதாரி மாணவர்களின் போக்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பல்கலைக்கழக நிர்வாகத்தில் தோன்றி உள்ள எந்த ஒரு பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்பள உயர்வு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கி இருப்பது தெரிந்ததே.

இதன் காரணமாக ஜி. சீ. உயர்தரப்பரீட்சை வினாத் தாள்கள் தயாரிக்கும் வேலைகள் பாதிக்கப்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

(இ-14)

# சாக்குத் தயாரிக்கும் கைத்தொழில் நிலையம்

## கட்டுடையில் நிறுவ கோரிக்கை

கட்டுடைப் பகுதியில் சணல் மூலம் சாக்குத் தயாரிக்கும் சிறு கைத்தொழில் நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு உதவுமாறு கட்டுடை சமூக அபிவிருத்தி சேமிப்பு கழகம், யாழ். சமூக அபிவிருத்தி மன்றத்திடம் கோரியுள்ளது.

கடந்த பல வருடங்களாக கட்டுடைப் பகுதியில், சணல் பயிர்ச் செய்கை கூடிய விளைச்சலை கொடுத்து வருகின்றது.

சணல் நூல் தயாரிக்கவும் சாக்குப் பின்னவும் ஒரு சிறு கைத்தொழிலை ஆரம்பிப்பதன் மூலம் வேலை வாய்ப்பினை ஏற்படுத்த முடியும் என்று மேற்படி கழகம் சமூக அபிவிருத்தி மன்றத்துக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளது.

மேலும் இப்பகுதி விதவைகளுக்கு, கால்நடை வளர்ப்பில ஈடுபடுவதற்கு ஏற்றதாக கடன் வழங்கும் திட்டம் ஒன்றை இப்பகுதியில் செயற்படுத்த வேண்டும் என்றும்—

நீர் இறைக்கும் இயந்திரம், தெளி கருவி ஆகியவற்றை கட்டுடை சேமிப்பு கழகத்திற்கு வழங்கினால் இப்பகுதி விவசாயிகள் சகாய கட்டணத்தில் வாடகைக்கும் இவற்றை பெற்றுக்கொள்ள முடியும் என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-135)

# கட்டு முறிப்பில் புக்காரா மீதே முதலாவது ஏவுகணை தாக்குதலாம்

## விமானப்படை அதிகாரி தகவல்

கொழும்பு, மே. 10
புலிகளின் முதலாவது ஏவுகணைத் தாக்குதல் கிழக்கில் கட்டு முறிப்பு குளத்தில் இடம் பெற்றதாக விமானப் படையின் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக கொழும்பு பத்திரிகை, செய்தி வெளியிட்டுள்ளது.

கட்டுமுறிப்பு குளத்தில் புலிகளின் தாக்குதலின் போது படையினருக்கு உதவச் சென்ற புக்காரா விமானம் மீதே இந்த ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்—

ஆனால் அந்த விமானம் மயிரிழையில் தப்பி விட்டதாகவும்— அந்த அதிகாரி கூறினாராம்.

வட பகுதியில் இரண்டு விமானங்கள் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலால் வீழ்த்தப்பட்ட போது இறந்தவர்களின் அஸ்தியை கொழும்புக்கு எடுத்துவர மூன்று விமானங்கள் வடபகுதிக்கு மேல் பறக்க புலிகள் அனுமதி வழங்கினர் என்றும் அதனால் பிறகு வடக்கு - கிழக்கு வான் பரப்பில் விமானப்படையின் எந்த விமானமும் பறக்கவில்லை என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

(இ)

விடுதலைப் புலிகளிடம்

# ஏவுகணை இருப்பது குறித்து ரஷ்ய ராஜதந்திரி கவலை

மொஸ்கோ, மே 10
விடுதலைப் புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இருப்பது தொடர்பாக ரஷ்ய ராஜதந்திரி ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளிடம் சாம் — 5 அல்லது சாம் — 7 ரக ஏவுகணைகள் இருக்கலாம் என்பது குறித்து கவலை தெரிவித்துள்ள அவர் ரஷ்யா விடுதலைப் புலிகளுக்கு அது போன்ற ஆயுதங்களை வழங்கவில்லை என்றும் வேறு தரப்புகளிடம் இருந்து அவர்கள் இவற்றை பெற்று இருக்கலாம் என்பதை தாம் மறுக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் ரஷ்ய தயாரிப்பு ஏவுகணைகளான சாம் ஏவுகணைகளையா அல்லது அமெரிக்க தயாரிப்புகளான ஸ்ரிங்கர் ரக ஏவுகணைகளையா கொண்டுள்ளனர் என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

5 ஆம் ஆண்டுப் பரீட்சை

# இரண்டாம் மொழியாக தமிழ் அல்லது சிங்களம்

கொழும்பு, மே 10
ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் இரண்டாவது மொழியாக தமிழ் அல்லது சிங்களத்தை ஒருபாடமாக எடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி தமிழ் மாணவர்கள் சிங்களத்தை ஒரு பாடமாகவும் சிங்கள மாணவர்கள் தமிழை ஒரு பாடமாகவும் எடுக்க முடியும்.

கட்டாய பாடமாக இல்லாமல் விருப்பத்துக்குரிய ஒரு பாடமாக இது அமையும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(க-14)

## தலைமைத்துவ பயிற்சி கருத்தரங்கு

தென்மராட்சி, மே. 10
யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட, தென்மராட்சிப்பகுதி பொது அமைப்பின் பிரதிநிதிகளுக்கும், பாடசாலை மாணவர்களுக்குமான 'தலைமைத்துவ பயிற்சிக் கருத்தரங்கு' சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கடந்த வாரம் இடம் பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட முகாமையாளர் திரு க. செ. நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி கருத்தரங்கை தென்மராட்சி கல்விக் கோட்டப் பிரதிப் பணிப்பாளம் திருமதி புஷ்பா கணேசலிங்கர் ஆரம்பித்து வைத்தார்.

(இ-5-117)

## முறைசாரா கல்வியாக ஆங்கிலநெறி

மானிப்பாய். மே 10
மானிப்பாய் இந்துக்கல்லூரியில் முறைசாராக் கல்வியாக ஆங்கில பட்டப்படிப்பு நெறி ஆரம்பமாகியுள்ளது.

மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்கம இதனை ஒழுங்கு செய்துள்ளது

மேற்படி பயிற்சி நெறிக்கும், ஆங்கில தட்டச்சு —சுருக்கெழுத்து பயிற்சி நெறிக்கும் முடிவில் மஸ்கன் சுப்பிரமணியம் ஞாபகார்த்த தொழில் நுட்ப ஸ்தாபனத்தின் சான்றிதழ்கள் வழங்கபபடும்.

(ஐ-14-90)

## மகளிர் மன்றம் அமைக்க ஏற்பாடு

வலிகாமம் மேற்கு. மே 10
வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் மகளிர் மன்றங்கள் அமைக்கப்பட உள்ளன.

மகளிர் அமைப்பு இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (க-175)

# தமிழருக்கு எதிராக கர்நாடகத்தில் பேரணி

பெங்களூர் மே 10
தென்னிந்திய மாநிலமான கர்நாடகத்தில் உள்ள கோலார் தங்கவயல் பகுதியைச் சேர்ந்த கர்நாடக சமூகத்தினர் அங்குள்ள தமிழர்களை எதிர்த்து தலைநகர் பெங்களூரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

நேற்று முன் தினம் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கர்நாடக—தமிழ்நாடு எல்லையில் உள்ள ஒரு பிரதேசம் கோலார் ஆகும்.

இங்குள்ள தமிழர்கள் அப் பகுதி வாழ் கர்நாடக மக்களை அச்சுறுத்தி அவர்களது உடமைகளை சேதப்படுத்துவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

கர்நாடக காவற்துறையின் பாதுகாப்புடன் சுமார் 500 கர்நாடக மக்கள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் தங்களது முறையீடுகள் எழுதிய மனுவை மாநில உள்துறை அமைச்சர் பி. ஜி ஆர் சிந்தியாவிடம் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒப்படைத்தனர்.

(இ-4)

கொழும்பு

# ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சமித்திவெற்றிவிழாபோட்டி

தென்மராட்சி. மே 10
கொழும்பு ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சமித்தியின் 25 ஆம் ஆண்டு நிறைவையொட்டி பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாசிரமத்தினர் யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே பேச்சுப் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

இப்போட்டிகள் யாழ். மகளிர் இந்துக்கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கீழ்ப்பிரிவு [ஆண்டு 4, 5, 6] மத்திய பிரிவு [ஆண்டு [7 8, 9], மேற்பிரிவு (ஆண்டு 10, 11, 12) ஆகிய மூன்று பிரிவுகளில் நடத்தப்படும்.

மாவட்ட மட்டப் போட்டிகள் இம்மாத [மே] இறுதியிலும், இறுதிப் போட்டிகள் ஜூன் மாதத்தில் கொழும்பிலும் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

[க-117]

ராணுவரீதியில்

# இலங்கை - இந்திய ஒத்துழைப்பு எவ்வளவு தூரம் சாத்தியப்படும்?

> இந்திய — இலங்கை இராணுவ ஒத்துழைப்பு என்ற தலைப்பில பி பி ஸியின் பாதுகாப்புத் துறை ஆய்வாளர் தினேஸ்குமார் எழுதியுள்ள ஆய்வுரைக் கண்ணோட்டம்

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதமளவில் இலங்கையின் பொலீஸ் பாதுகாப்புத் துறையைச் சார்ந்தவர்களுக்கு பயிற்சி அளிக்குமாறு அதிகாரபூர்வமாக வேண்டுகோளொன்று இந்தியாவுக்கு விடுக்கப்பட்டது.

அப்போது சந்திரிகா குமாரதுங்க இலங்கை அரசின் பிரதமராக இருந்தார்.

அதன் பின் இரு மாதங்கள் கழித்து அவர் ஜனாதிபதியானார்.

[illegible] பொலீஸ் பாதுகாப்புச்சபை [illegible] இந்தியாவுக்கு விமானம் மூலம் பயணமானார்கள்.

அவர்கள் டில்லிக்குத் தெற்கே ஹரியானா மாநிலத்திலுள்ள 'மனுஸாரில்' அமைந்திருக்கும் தேசிய பாதுகாப்புப் படையினரின் மிகுந்த பாதுகாப்புடைய பயிற்சி நிலையத்துக்குப் பயிற்சி பெறச் சென்றார்கள்.

இவர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி நான்கு வாரங்களுக்கு நீடித்தது.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தனிப் பாதுகாப்பு அதிகாரிகளாகவோ அல்லது மெய்க்காவலர்களாகவோ பணிபுரிய அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது

பிறிதொரு நாட்டின் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இந்தியாவில் தேசிய பாதுகாப்பு பயிற்சி அளிக்கப்பட்டது இதுவே முதற்தடவையாகும்.

இத்தகைய பயிற்சிக்கு பாதுகாப்புச் சபையைச் சேர்ந்தவர்களைத் தெரிவு செய்வது இயல்பே.

ஏனெனில் 1984 நவம்பர் மாதம் அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டதை யடுத்து இப்படி ஒரு சிறப்பு அதிரடிப்படை அமைக்கப்பட்டது.

தம்முடைய அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி குறித்து கொழும்பு திருப்தி தெரிவித்துள்ளது.

இப்போது திருமதி குமாரதுங்கவின் மேலும் பல மெய்க்காவலர்களுக்கு பயிற்சி அளிப்பது குறித்து இந்தியா ஆராய்ந்து வருகின்றது.

கடந்த சில ஆண்டுகளில் பல அரசியல், இராணுவ உயர்நிலைத் தலைவர்கள் விடுதலைப் புலிகள் என்று சந்தேகிக்கப்படுவோரால் படுகொலை செய்யப்படுவதை இலங்கை கண்டுவருகின்றது.

இவ்வகையில் அண்மையில் நடந்த சம்பவம் திரு. காமினி திசாநாயக்கா தற்கொலையாளி ஒருவரினால் கொலை செய்யப்பட்டது ஆகும்.

இது நடந்த முறை ராஜீவ் காந்தியை கொலை செய்வதற்கும் பயன்படுத்தப்பட்ட முறையை ஒத்திருப்பதாக இலங்கை அதிகாரிகள் எண்ணியதால் அவர்கள் இந்திய புலனாய்வுத்துறையின் உதவியை நாடினார்கள்.

படை அனுப்புவது சாத்தியம் இல்லை

இலங்கையில் அண்மைக் காலங்களில் நிலவும் வன்முறைச் சம்பவங்களின் காரணமாக புதுடில்லிக்கும், கொழும்புக்கும் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான புதிய சாத்தியக்கூறுகள் தோன்றியுள்ளதாக புதுடில்லியில் பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

ஆனால் அவ்வாறான எந்த ஒத்துழைப்பிலும் 1987 இல் நடந்தது போன்று இலங்கைக்கு இந்தியப்படையை அனுப்பும் செயல் இம்முறை கட்டாயம் இடம்பெறாது.

மாறாக பாதுகாப்பு உதவி, பயிற்சி தருவது அல்லது வேந்திரவகையில் அல்லது தளபாட வகையில் உதவி செய்வது என்ற அளவோடு அமையலாம்.

இவ்வகையில் ஏற்படக்கூடிய இராணுவ ஒத்துழைப்பை இந்த மண்டலம் எங்கும் உள்ள ஆய்வாளர்கள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

[இ-7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

ஜேஸி நாம்பன் கன்று விற்பனைக்கு. 9 மாதம் வயதுடையது ஒன்றும், 7 மாதம் வயதுடையது ஒன்றும் 16-5-95ஆம் திகதிக்கு முன் கீழ்க்காணும் விலாசத்தில் பார்வையிட்டு கூறுவிலையை சமர்ப்பிக்கவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ. து). திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். [சி-1174]

Vono, கட்டில், ஹம்பர் சைக்கிள் நல்ல பாவனையில் உள்ளது. விற்பனைக்குண்டு. இல. 41, ஸ்ரான்லி கல்லூரி வீதி, அரியாலை. [36571]

**எரு விற்பனைக்கு**

மாட்டெரு விற்பனைக்குண்டு. 16-5-95 ஆம் திகதிக்குமுன் கீழ்க்காணும் விலாசத்தில் பார்வையிட்டு கூறுவிலையை சமர்ப்பிக்கவும். பொதுமுகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ.து), திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் [சி-1173]

**கோழி - குஞ்சு விநியோகம்**

தடுப்பூசி போட்ட ஒரு மாத Prima, Lohmann White வெள்ளை ேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர் (36568)

**அறிமுக மலிவு விற்பனை**

யாழ்ப்பாண புத்தக நிலையம். 448 மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். [சி-1362]

**வர்த்தக முன்னோடி**

வர்த்தகமும் நிதியும் Past Paper 1990 — 1994 வரை [1991—1992 Special] மொத்தம் 7 Exams Paper அடக்கம். E செவநாயகம் Royal College விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-1369]

**O/L கணிதம் 95**

Distinction, Credit பெறுவோருடைய ஆரம்பத்தில் விருத்திவிசேடமாக (ஆண்டு 9, 10 உட்பட) வாரம் ஐந்து மணித்தியாலங்கள் கற்பிக்கப்படும். 15 வருடங்கள் (O/L) கிடைத்தான்கள் திருத்திய B Sc ஆசிரியரால், இல:85 சிவன் கோயிலடி (சிவன் கோயில் மேற்கு வீதி), திருநெல்வேலி. 36527)

**வெளிவந்துவிட்டது**

குடாநாட்டின் வலைப்பட்டலம் பல்கலைக்கழக வெளிவாரி முதற்கலைத் தேர்வுக்கும் G A Q. பாலபண்டித மாணவருக்கும் ஏற்றது. 5ஆம் ஆண்டு ஆரம்ப பொது அறிவு (தொகுப்பு: சி பொன்னம்பலம்) மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். ஸ்ரீகாந்த புத்தகசாலை, நல்லூர். (சி1374)

## குழாய்க்கிணறு

தென்மராட்சி, மே 10

கொடிகாமம் அரசினர் வைத்தியசாலையில் குழாய்க்கிணறு அமைக்கப்பட்டு நீரிறைக்கும் இயந்திரம் மூலம் குடி தண்ணீர் வழங்கப்படவுள்ளது.

இதற்கென தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுளளது.

இக் குழாய்க்கிணறு அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(உ-117)

## கடனுதவி நிறுத்தம்

அராலி, மே 10

வலிகாமம் மேற்கு பிரதேச பம்பாய் வெங்காய உற்பத்தியாளர்களுக்கு மக்கள் வங்கியினால் இலங்கை செஞ்சிலுவைச்சங்க மூலம் வழங்கப்பட்ட கடனுதவியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

உற்பத்தியை ஆரம்பிக்க தயாராக இருந்த விவசாயிகள் இதனால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்

(உ-14-12)

---

**LIONS CLUBS INTERNATIONAL**

Dist. 306 B — Region VII

**LEOS SEMINAR**

Fixed for 10th May 1995

Is Postponed to 11th May 1995 — Thursday

8-30 a. m. Same Venue

Any Inconvenience caused is regretted Pl.

**Lion S. S. Thangarajah,**
Dist.. Chairman: Leos.

"Marutha Mahal"
Manipay. [36580]

---

**கீன் கல்வி நிலையம்**

பலாலி வீதி, திருநெல்வேலி.

**A/L 97** கலை, வர்த்தகம்

புதிய பிரிவு

| ஆசிரியர்கள் | பாடங்கள் | நேரம் சனி, ஞாயிறு |
|---|---|---|
| சேரன் | புவியியல் | 12 — 1 |
| காரை. செங்கா | இந்து நாகரிகம் | 1 — 2 |
| காரை. செங்கா | இந்து சமயம் | 2 — 3 |
| வரதன் | வர்த்தகம் | 2 — 3 |
| வரசராஜன் | பொருளியல் | 3 — 4 |
| சௌந்தி | கணக்கியல் | 4 — 5 |
| காரை செங்கா | தமிழ் | 4 — 5 |
| S S. மனோகரன் | அளவையியல் | 5 — 6 |

ஆரம்பம: **13 - 05 - 1995** சனி

[சி-1170]

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி சிவபாக்கியம் திலகராயர்**

மலர்வு: 10-02-1917 உதிர்வு: 11-04 1995

எங்கள் அன்புத் தெய்வமே! அணையாத தீபமே! உன்னை எண்ணும்போது உள்ளம் நெகிழுகம்மா கைபிடித்த நாள் தொடக்கம் ஐம்பத்துமூன்று வருட இவ்வாழ்க்கையில் என்னுடன் இரண்டறக் கலந்த தெய்வமே!

பெற்ற தாயாகி பெருமையுடன் பாலூட்டி கண் விழித்து எமை ஆளாக்கிய அன்புத் தெய்வமே!

உற்றதுணை சேர்த்து உலகில் எமை வாழவைத்து நற்பண்புகள் கணைப் பயிலவைத்து நலமுடன் நம் வளர்ச்சி பேணி நின்ற அன்புத் தெய்வமே!

மாதமொன்றும் ஆனதம்மா! உன் ஆசைமுகம் பார்த்து உற்றதுணை உங்களைப் போல் கிட்டுமோ இவ்வையகத்தில்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

31ஆம் நாள் நினைவு தினமாகிய இன்று (10-5-1995) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருக்கும் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வி. திலகராயர் J P.,
"பாக்கிய இல்லம்",
51 சந்தைமாதா வீதி,
பாண்டியன் தாழ்வு,
தண்டிகாவி

(36579)

---

# சீரற்ற காலநிலையின் காரணமாக
# 10 ஆயிரம் குடும்பங்கள் வீடிழப்பு

## கொழும்பில் நேற்று திடீர் சூறாவளி

கொழும்பு மே 10

நாடு முழுவதும் நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக பல இடங்களிலும் மழையும் கடும் காற்றும் இருந்து வருகின்றது.

10 ஆயிரம் குடும்பங்கள் வரையில் வெள்ளத்தினால் அகதிகளாகி உள்ளனர்.

நேற்று காலை 5-10 மணியளவில் கொழும்பு நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் மினிச் சூறாவளி ஒன்று ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மணிக்கு 75 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

இதேவேளை வங்காள விரிகுடாவில் தமிழ் நாட்டுக் கரையோரமாக தாழமுக்கம் ஒன்று உருவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கிழக்குத் திசையில் இருந்து கடும் காற்று வீசலாம் என்றும், கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடற்படையினரும் மீனவர்களும் கடலில் இறங்கவேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் பலபாகங்களிலும் மழை பெய்யும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(இ-14)

---

**A/L 96, 97**

புவியியல்:
திரு. சண்

96 7 00 — 8-00
97 8-00 — 9-00

ஆரம்பம்: **13-05-95** சனி

**BECON**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/1375)

---

உ
ஐங்கரன் துணை

கோண்டாவில் - கிழக்கு
ஆசிமட அரசடி விநாயகர் ஆலய
**லக்ஷார்ச்சனை**

இன்று 10 — 05 — 1995 புதன்கிழமை காலை 8-00 மணியளவில சங்காபிஷேகம் ஆரம்பமாகி கணபதி ஹோமம் நடைபெறும்
அதனைத் தொடர்ந்து 10 தினங்களுக்கு) தினமும் மாலை 4 00 மணியளவில் லக்ஷார்ச்சனையும் ஹோமமும் நடைபெறும்.

லக்ஷார்ச்சனை பூர்த்தி தினமான (19 — 05 — 1995) வெள்ளிக்கிழமை காலை சங்காபிஷேகமும், மாலை லக்ஷார்ச்சனை பூர்த்தி விழாவும் நடைபெற்று, எல்லாம் வல்ல பஞ்சமுக விநாயகப் பெருமான் திருவீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும்.

கிரியைகள் யாவும் ஆலய பிரதமகுரு:
"ஆகம கிரியா திலகம்"
பிரம்மஸ்ரீ நா. சபாரத்தினக் குருக்கள்
தலைமையில் நடைபெறும்.

ஆலய நம்பிக்கை
பொறுப்பாளர் சபை.

அனுசரணை:
**HARRY'S INSTITUTE**
KONDAVIL EAST, KONDAVIL. (36578)

---

**விக்னா கல்வி நிறுவனம்**

52, ஸ்ரான்லிறோட் — யாழ்ப்பாணம்
(O/L வகுப்புக்களுக்கு
தனித்துவம் வாய்ந்த ஒரேநிறுவனம்)

**O/L DAY CLASSES**

காலை 8 30 மணி முதல்
பி. ப - 2 மணிவரை

மீண்டும் ஒரு புதிய பிரிவு

**புதிய 6 ஆம் பிரிவு**

ஆரம்பம்
11-05-1995 (வியாழன்)
காலை 8. 30 மணி

★ மாணவர்களுக்கு நன்கு அறிமுகமான எமது தனித்துவம் வாய்ந்த திறமை மிக்க யாழ் முன்னணி ஆசிரியர் குழு இணைத்துக் கொள்ளப்படுகின்றன. (சி/1368)

---

பளைப் பிரதேச

## முன்பள்ளி ஆசிரியருக்கு ஒரு வார பயிற்சி வகுப்பு

தென்மராட்சி மே 10

பளைப் பிரதேச முன்பள்ளி ஆசிரியைகளுக்கான ஒருவார கால சேவைக்காலப் பயிற்சி வகுப்புகள் கடந்த மாத இறுதியில் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர் வாழ்வு நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது

இப் பயிற்சி வகுப்பில் "குழந்தை உளவியல்" என்னும் பொருளில் முகமாலை பங்குத் தந்தை அருட்திரு ஸ்ரலின் அடிகளும், "மூலிகைச் செடிகள் மூலம் சிறுவர்களைப் பாதுகாத்தல்" என்னும் பொருளில் வைத்தியக் கலாநிதி (திருமதி) விவியன் சத்தியசீலனும் "ஆரோக்கியமான பிள்ளையின் ஆரம்ப சுகவாழ்வு" என்னும் பொருளில் பளைப்பகுதி குடும்பநல சேவையாளர் திருமதி ப. பத்மநாதனும்,—

"தேவைப் பகுப்பாய்வு" என்னும் பொருளில் பளை பிரதேச சபை செயலாளர் திரு. கு. ந பாலச்சந்திரனும், பாலர் பாடசாலைத் தோட்டமும் அதன் பண்புகளும்" என்னும் பொருளில் பளைப் பிரதேச செயலக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் திரு க. யோகநாதனும்—

இணைப்புறவு கற்றல் முறை மொன்டிசூரி கல்விமுறை குழந்தை மைய கல்விமுறை என்னும் பொருளில் பச்சிலைப் பள்ளி பிரிவு முன்பள்ளி கல்வித் திட்ட இணைப்பாளர் செல்வி எஸ். வர்ணலட்சுமியும், "பாலர் பாடசாலைத் தோட்டமும் அதன் முக்கியத்துவமும்" என்னும் பொருளில் பளைப்பிரிவு விவசாயப் போதனாசிரியர் செல்வி வி. சி முத்துப்பிள்ளையும் உரையாற்றினார்கள்.

(ஒ-117)

## தையல் போதனாசிரியர் பரீட்சையில் 47 பேர் சித்தி

### விரைவில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 10

வட கிழக்கு மாகாண சபையின் கீழ் தையற் பயிற்சி போதனாசிரியர்களைத் தெரிவு செய்வதற்காக யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் 47பேர் சித்தியடைந்துள்ளார்கள்.

சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை விரைவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுமென்று தெரிவிக்கப்பட்டது.

[ஐ-4]

---

**நாடகமும் அரங்கியலும்
இந்துநாகரிகமும்
A/L 96, 97**

பா. அகிலன்

225, கோயில் வீதி (UNHCR அருகில்),
நல்லூர். (36583)

---

**பிரத்தியேக வகுப்புக்கள்**

**A/L 96, 97** சனி-ஞாயிறு வகுப்புக்கள்

கணக்கியல் — உருத்திரசிங்கம்
வர்த்தகம் — சத்தியதாசன்

ஆரம்பம: **13 - 05 - 1995** சனிக்கிழமை

A/L 96 — 3 - 4 A/L 96 — 4 - 5
A/L 97 — 4 - 5 A/L 97 — 3 - 4

அனுமதிகளை முன் கூட்டியே பெறறுக் கொள்ளவும்.

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். [சி-1377]

---

அச்சுவேலி
சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்
அவர்களினால்
**"சிவலிங்கப்பிரதிஷ்டாவிதி"**
அண்மையில் வெளிவந்துள்ளது

கிடைக்குமிடம்:
வை. கனகசபாபதிகுருக்கள்
அச்சுவேலி.

நல்லூர் சிவன் கோவில்
ஸ்ரீமசுந்தரகுருக்கள்,
நாச்சிமார் கோயிலடி, (36584)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
802/2 காங்கேசன் வீதி
யாழ்ப்பாணம்

## வேண்டாதவை தவிர்க்குக!

விடுதலைப் போராட்டத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில், எதிரிப்படைகளுக்கு மண்ணையும் மக்களையும் காட்டிக் கொடுக்கும் செயலில் ஈடுபட்ட ஐவரை அடையாளம் கண்டுள்ளது பற்றிய தகவலை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

இவர்களைப் பயன்படுத்தி, இவர்கள் கொடுத்த தகவல்களை வைத்துக் கொண்டு, அரசாங்கப் படைகள் எவ்வாறு அழிவு வேலைகளைச் செய்திருக்கின்றன என்பதனையும் புலிகள் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளனர்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் முழுநோக்கமுமாகும். அதனாலேயே தமிழர்களின் போராட்டத்தை முறியடித்து, அதனைத் தோல்வியுறச் செய்வதற்கு தனக்குள்ள சகல வளங்களையும் சக்திகளையும் அது உபயோகிக்கிறது.

போராட்டம் ஒன்றை தோற்கடிப்பதற்கு உளவும், காட்டிக்கொடுத்தலும் பிரதான பாதக அம்சங்களாகின்றன. பகைவன் தானே வெளியில் வந்து இருந்து இங்கே உளவறிந்து செல்லலாம். அது இயலாத பட்சத்தில் இங்கே உள்ள சிலரை பணம் கொடுத்து வாங்கித் தனக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றைய கள நிலைமையில் தானேவந்து உளவறிவது இயலாது; அது ஆபத்தானது என்று தெரிந்துகொண்டு, அரசாங்கப் படையினர் எமக்குள்ளே உள்ள துரோகிகளில் சிலரைத் தமது தேவைக்கு பயன்படுத்துகின்றனர்.

வெளியே இருந்து வந்து உளவறிந்து செல்லும் பகைவனைவிட, உள்ளே இருந்து எதிரிக்குத் தகவல்களை வழங்கும் காட்டிக்கொடுப்பவர்கள் ஆபத்தானவர்கள்.

பணத்துக்காகவும், அற்ப சலுகைகளுக்காகவும் தனது சொந்த மக்களை அழிக்கவும், விடுதலைப் போராட்டத்தை நசுக்கவும் எதிரிக்கு உதவுபவன் எதிரியை விடக் கொடியவனே. எதிரி உள்ளே வந்து உளவறிந்து பெறமுடியாத விபரங்களை, தகவல்களை எல்லாம், காட்டிக்கொடுக்கும் கயவனால் பெறமுடியும். இந்த மண்ணின் மகன், உடன் பிறப்பு என்பதால் மக்களோடு மக்களாகச் சேர்ந்து இரகசியங்களைக் கூட சாதுரியமாகப் பெற்றுவிட முடியும். அதனாலேயே உளவறிய வரும் எதிரியை விட காட்டிக் கொடுக்கும் நம்மவன் ஆபத்தானவனாகின்றான்.

எனவே வெளியே உள்ள பகைவனை விட, உள்ளே சேர்ந்திருக்கும் எதிரி குறித்து எமது மக்கள் மிகவும் எச்சரிக்கையாகவும், விழிப்பாகவும் இருக்க வேண்டும். எத்தனையோ இன்னல்கள், இடர்கள், இடையூறுகள், அழிவுகளுக்கு மத்தியில், போராளிகளின் தியாகத்தாலும், அவர்களது வீரத்தாலும், மக்களின் ஆதரவாலும் முன்னெடுக்கப்படும் போராட்டத்தை ஒரு சில புல்லுருவிகளின் காட்டிக்கொடுக்கும் செயல் மழுங்கடித்துவிடும் பேராபத்து உண்டு. இதனைத் தேசப்பற்றுள்ள ஒவ்வொருவரும் அறிவு பூர்வமாகவும், ஆழமாகவும் புரிந்து கொள்வது அவசியம்.

ஆகையால் காட்டிக் கொடுப்பவர்களை அடையாளம் காண்பதில் மட்டுமன்றி, அனாவசியமான கதைகளையும், தேவையற்ற வம்பளத்தல்களையும் தவிர்த்துக் கொள்வதிலும் மக்கள் அக்கறை காட்ட வேண்டும்.

வேண்டாத கதைகள் பேசுவதால், நீங்களே எதிரிக்குத் தேவையான முக்கிய தகவல்களை, காட்டிக் கொடுப்பவர்கள் மூலம் எட்டச் செய்யக் கூடிய சாத்தியம் உண்டு. அப்போது நீங்களும் போராட்டத்தினைக் காட்டிக் கொடுப்பவராக மாறுகிறீர்கள்!

இத்தகைய துரோகத்தனத்தில் அகப்பட்டுக் கொள்ளாமல் ஒதுங்கிக் கொள்வதற்கு, கதை காவுதல், கிசுகிசு பேசுதல், வம்பளத்தல் ஆகியவற்றை தவிர்த்துவிடுங்கள்.

# 300க்கும் மேற்பட்ட பொலிஸார் தோட்டப் பகுதிகளில் தேடுதல்

## தீவிரவாதிகள் ஊடுருவி உள்ளனராம்

கொழும்பு, மே 10

பஸ்கள், லொறிகள் மூலம் வந்திறங்கிய 300 க்கும் மேற்பட்ட பொலிஸார் லுணுகல தோட்டப்பகுதியை சல்லடை போட்டுத் தேடினர்.

தீவிரவாத சந்தேக நபர்கள் இத் தோட்டப் பகுதிகளில் ஊடுருவி உள்ளதாகக் கூறியே இத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த சனிக்கிழமை பசறை மற்றும் மடுல்சீமை ஆகிய இரு பொலிஸ் நிலையங்களையும் சேர்ந்த பொலிஸார் இணைந்து கூட்டாக இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த தேடுதலின் போது லுணுகல பகுதியைச் சேர்ந்த அடாவத்தை, சோலண்ட்ஸ், ஒப்டன் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் கடும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

விசாரணைகளின் முடிவில் நான்கு இளைஞர்களை பொலிஸார் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

இவர்களில் இருவர் அடாவத்தைத் தோட்டத்தையும், மற்றும் இருவர் சோலண்ட்ஸ் தோட்டத்தையும் சேர்ந்தவர்கள்.

இவர்களில் ஒருவர் வட பகுதிப் பெண் ஒருவரை மணம் முடிப்பதற்காக தோட்டத்திற்கு அழைத்துச் சென்றவர் என்றும், அவர் கொழும்பில் தொழில் பார்ப்பவர் என்றும் தெரியவருகிறது.

இதேவேளை 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஊவா மாகாணத்தைச் சேர்ந்த பல தோட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

இவர்களில் அநேகர் இன்று வரை எதுவித விசாரணைகளும் இன்றி தடுப்புக்காவலில் இருந்து வருகின்றனர்.

காலத்துக்குக் காலம் தோட்டப் பகுதிகளில் இடம் பெற்று வரும் இத்தகைய சம்பவங்கள் அங்கு நிலவும் அமைதிச் சூழலை சிதைத்து விடும் என்று தொழிற்சங்க வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் நிகழும் தேடுதல் மற்றும் கைதுச் சம்பவங்களால் தலைநகரில் தங்கியிருந்த பல தோட்ட இளைஞர்கள் ஏற்கனவே தமது தோட்டங்களுக்குத் திரும்பிக் கொண்டு இருக்கின்றனர் என்பது தெரிந்ததே.

பயம் காரணமாக தமது தோட்டங்களுக்குத் திரும்பியோர், தமது சொந்த பிரதேசங்களிலும் நிம்மதியாக இருக்க முடியவில்லையே என்று அங்கலாய்க்கின்றனர். [இ-5]

## தினமும் இரவு நேரம் தொடரும் ஷெல் வீச்சு

பலாலி இராணுவ முகாமிலிருந்து இரவு வேளையில் தினசரி 9மணிக்கு பின்னர் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் வீச்சு நடத்தப்படுகின்றது.

பத்தமேனி, அச்சுவேலி, கதிரிப்பாய், இடைக்காடு, தொண்டமனாறு, வல்லைக் கடல் நீரேரிப் பகுதி ஆகியவற்றை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்படுவதால் மக்கள் இரவு வேளையில் பெரும் அச்சத்துடன் வாழ்கின்றனர்.

பல குடும்பங்கள் இரவு வேளையில் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களிலும் அயல் கிராமங்களிலும் தங்குகின்றனர். (க-155-13-11)

## கம்பன் விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், மே 10

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் 15வது ஆண்டு கம்பன் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று புதன் கிழமை நடைபெறும்.

இன்றைய நிகழ்வுகள் காலை 9-30 மணிக்கு உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா தலைமையில் ஆரம்பமாகும்.

காலைச் சிறப்பு நிகழ்வாக பண்டிதர் க. வீரகத்தி தலைமையில் 'சங்கமும் கம்பனும் இயற்கையை கையாண்ட விதம்'' என்னும் பொருளில் ஆய்வரங்கு இடம் பெறும்.

பண்டிதர் க. சச்சிதானந்தன் ஆய்வாளராக கலந்து கொள்வார்.

மாலை நிகழ்வுகள் 4-30 மணிக்கு வைத்திய நிபுணர் வி. கருணாகரன் தலைமையில் ஆரம்பமாகும்.

''குறள் நெறியில் அயோத்தியா காண்டத்தின் ஊடு பொருளாய் கம்பன் கொண்டது இல்லறச் சிறப்பே!, துறவற மேன்மையே!, ஊழின் வலியே! என்ற இ. ஜெயராஜ் தலைமையிலான பட்டி மண்டபம் மாலை சிறப்பம்சமாக அமையும்.

கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் நடைபெற இருந்த கம்பன் விழா நிகழ்வுகள், சீரற்ற கால நிலை காரணமாக — முதல் நாள் நிகழ்வுகளை தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டு இருந்தன என்பது தெரிந்ததே. (இ-14-111)

## மட்டு. விமான நிலையத்துக்கு கடும் பாதுகாப்பு

நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக மட்டக்களப்பு விமானநிலையத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்துக் காரணங்களை முன்னிட்டு விமான நிலையம் செல்வோர் கடும் உடல் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

அதே சமயம் அவர்களின் வாகனங்கள் மற்றும் உடைமைகளும் தீவிர பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன. (இ-5)

## முறைசாரா கல்வி இறுதி பரீட்சை

வடமராட்சி, மே. 10

கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியில் முறைசாராக் கல்வியின் இறுதிப் பரீட்சை இம்மாதம் 20 ஆம், 21 ஆம், 22 ஆம் திகதிகளில் நடைபெறும்.

உடையமைத்தல், மரத்தளபாட உற்பத்தி, மோட்டார்க்கார் திருத்துதல் முதலான முறைசாராக் கல்விக்கான இறுதிப்பரீட்சையே இங்கு நடைபெறும். (இ-173)

## சங்க உறுப்பினர்களாக சுளகுபின்னும் குடும்பங்கள்

வலிகாமம் தெற்கு, மே 10

இலங்கை வங்கி சுன்னாகம் கிளையினரால் இனம் காணப்பட்டு சுய முயற்சிக் கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கத் தெரிவு செய்யப்பட்ட மாசியப்பிட்டி கிராமத்தைச் சேர்ந்த மரபுவழி சுளகு பின்னும் முப்பது குடும்பங்களும் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வலிகாமம் கோட்டக் கொத்தணியின் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மாசியப்பிட்டி மறுமலர்ச்சி சனசமூக நிலைய முன்றிலில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு தி. சபாரத்தினம் முன்னிலையில் இக்குடும்பங்கள் உறுப்பினர்களாக சேர்ந்து கொண்டனர்.

இவ்வைபவத்தில் மேற்படி சங்கத்தின் வலிகாமம் கொத்தணித் தலைவர் திரு. நாகணேசன், இலங்கை வங்கி யாழ்ப்பாண பிரதேச முகாமையாளர் திரு. பெ. சண்முகசுந்தரம், இலங்கை வங்கி சுன்னாகம் கிளை முகாமையாளர் திரு எஸ். விக்கினராசா, அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. பொ. பாலகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-152)

## வீதியை அகலமாக்க மகஜர்

கொழும்புத்துறை, மே. 10

கடந்த பெப்ரவரி மாதம் யாழ். மாநகர சபையால் அகலமாக்கப்பட்ட நல்லூர் கொண்டலடி வீதியில் மீண்டும் பழைய இடத்தில் வேலிகள் போடப்பட்டுள்ளன எனவும்—, இவற்றை மீண்டும் அகலமாக்கித் தரும்படி கோரியும் —

நல்லூர் கொண்டலடி சனசமூக நிலையத்தினர் மாநகர சபைக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

## வடபிராந்திய லியோ கழக கருத்தரங்கும் பரிசளிப்பும்

மாவட்டம் 306B வடபிராந்திய லியோ கழகங்களின் வருடாந்த கருத்தரங்கும் பரிசளிப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை காலை 9மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் லியோ கழகங்களின் மாவட்டத் தலைவர் லயன் எஸ். எஸ். தங்கராஜா தலைமையில் நடைபெறுகின்றன. இவ் வைபவத்திற்கு சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் வ. சிறிகாந்தாவும், பாரியார் டாக்டர் க. சிறிகாந்தாவும், பிரதம விருந்தினர்களாகவும் பங்குபற்றுவர்,

மாவட்டம் 306B வடபிராந்தியத் தலைவர் லயன் எஸ். ராஜேஸ்வரனும் அவரது பாரியார் டாக்டர் சிறிராணி ராஜேஸ்வரனும் முன்னாள் பிராந்தியத் தலைவர் லயன் (டாக்டர்) எமில் அந்தனாசியாரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்கிறார்கள்.

இவ்வருடாந்த வைபவத்தில் வடபிராந்தியத்திலுள்ள 16 லியோ கழகங்கள் பங்குபற்றுகின்றன.

மேலும், கல்லூரிகளில் இயங்கும் சிறந்த லியோ கழகங்களாக யாழ். இந்து மகளிர் கல்லூரியும், யாழ். மத்திய கல்லூரியும் வெளியில் இயங்கும் லியோக் கழகங்களில் யாழ். வட்ட லியோ கழகமும் கணிக்கப்பட்டு விருதுகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் வியன் றேமன் முத்தையா ஞாபகார்த்தமாக நடத்தப்படும் நாவன்மை போட்டியில் தமிழில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர் ந குகபரனுக்கும் ஆங்கிலத்தில் முதல் இடத்தைப் பெற்றுக்கொண்ட உடுவில் மகளிர் கல்லூரி மாணவி கா. ரஜிதாவுக்கும் தங்கப்பதக்கங்கள் வழங்கப்படும். (க)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா

யாழ்ப்பாணம், மே 10

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இன்று இடம் பெறவிருந்த தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் டிப்ளோமா கல்வி நெறி அமர்வுகள் நாளை வியாழன் இடம் பெறுமென சிரேஷ்ட விரிவுரையாளர் அறிவிக்கின்றார். (ஒ)

## மாணவர்களுக்கு பாராட்டு விழா

1994 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சையில் கலைப் பிரிவில் 305 புள்ளிகளைப் பெற்று தென்மராட்சிப் பகுதியில் முதலிடத்தைப் பெற்ற மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவன் க. கணேஸ்வரனுக்கும், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவ மாணவியர்க்கும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் நடத்திய பாராட்டு விழா அண்மையில் வித்தியாலய அரங்கில் அதிபர் அ. பொ. செல்லையா தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்விக் கோட்ட உதவிப் பணிப்பாளர் இ. கணேசன் கலந்து கொண்டார். (க-117)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டி ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி இன்று புதன் காலை 8 30 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுமெனக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## தொலைக்கல்வி விசேட அமர்வு

யாழ்ப்பாணம், மே 10

வேம்படிமகளிர் உயர்தரப் பாடசாலையில் அமைந்துள்ள தொலைக்கல்வி நிலையத்தில் 13 ஆம் திகதி சனிக்கிழமை விசேட அமர்வு நடைபெற இருப்பதால் சகல ஆசிரியமாணவர்களையும் போதனாசிரியர் களையும் சமுகமளிக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுக்கொள்கின்றார். (க)

## இரு நாடாளுமன்றங்கள் இரு பாதுகாப்புப் படைகள்

### இனப்பிரச்சினை தீர்வுக்கு யோசனை

கொழும்பு, மே 10

இலங்கையின் இரு பிரதான இனங்களுக்கும் தனித்தனியான இரண்டு நாடாளுமன்றங்களையும் இரண்டு பாதுகாப்புப் படைகளையும் அமைப்பதன் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்படலாம்.

இலங்கையின் நண்பர்கள், (Friends of Srilanka)எனும் அமைப்பினால் ஹொங்கொங்கில் ஒழுங்கு செய்யப்பட்ட ஆசிய அறிஞர்களின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே டாக்டர் சதானந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியாவின் முன்னாள் உயர்நீதிமன்றநீதிபதிகிருஷ்ண ஐயர் தலைமையில் இலங்கையில் நண்பர்கள் அமைப்பு இயங்கி வருகின்றது.

தடைகள், இடையூறுகள் ஏற்பட்டாலும் இலங்கை அரசும் விடுதலைப்புலிகள் அமைப்பும் சமாதான பேச்சுகளை தொடர வேண்டும் என்று இம்மாநாட்டில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (க-14)

### யாழ். பல்கலை. பட்டதாரிகளில்

## ஆங்கிலத்தில் திறமைச்சித்தி பெறுவோருக்கு பரிசில்கள்

யாழ்ப்பாணம், மே 10

யாழ். பல்கலைக்கழகத்தில் பயின்று ஆங்கிலத்தில் திறமைச்சித்தி பெற்று பட்டம் பெறும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பரிசில்கள் வழங்கப்பட உள்ளன.

இதற்கென நிதியம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் ச. சங்கரப்பிள்ளை வீரசிங்கத்தின் ஞாபகார்த்தமாக அவரது மாணவர்களும் நண்பர்களும் இணைந்து இந்த நிதியத்துக்கு குறிப்பிட்ட தொகை ஒன்றினை வைப்புச் செய்துள்ளனர். (இ-5-3)

# விவாகரத்துச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர அமைச்சரவை முடிவு

கொழும்பு, மே. 10

பல ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட விவாகரத்துச் சட்டம் திருத்தி அமைக்கப்பட்ட உள்ளது.

இந்த திருத்தங்களுக்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது.

திருமணங்களின் விளைவாக துயர்களை அனுபவித்து வரும் பிரச்சினைக்குரிய குடும்பங்களுக்கு நிவாரணம் அளிப்பதாக இந்த திருத்தம் அமையும்.

நீதி மன்றிடம் சுலபமான முறையில் விவாகரத்து பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது உள்ள சட்டத்தின் பிரகாரம் 3 காரணங்களுக்காக மாத்திரம் விவாகரத்து பெற்றுக் கொள்ள முடியும்.

திருமணத்தின் பின் வேறொருவருடன் தொடர்பு வைத்திருத்தலை—

பகைமை காரணமாக பிரிந்து செல்லுதல்—

குணப்படுத்த முடியாத மலட்டுத்தன்மை — ஆகிய காரணங்களுக்காகவே விவாகரத்து வழங்கப்பட்டு வந்தது.

திருமண பதிவுச் சட்டத்தின் 19 ஆவது பிரிவில் கொண்டுவரப்படவுள்ள திருத்தங்களின் பிரகாரம்—

3 வருட காலங்களுக்கு மேலாக பிரிந்து வாழும் தம்பதிகள், கோரும் பட்சத்தில் நீதிமன்றம் அவர்களுக்கு விவாகரத்து வழங்கும்.

விவாகரத்து பெறுவதற்கு முன் பிள்ளைகளின் பராமரிப்பு கல்வி இருப்பிடம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில் நிரந்தர சேமநலத் திட்டம் ஒன்றை மேற்படி பெற்றோர் வகுத்திருக்க வேண்டும்.

இது குறித்து நீதிமன்றம் திருப்தி கொள்ளும் பட்சத்திலேயே விவாகரத்து வழங்கப்படும்.

திருத்தம் குறித்த புதிய சட்ட மூலங்கள் இன்னும் சிலவாரங்களில் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படும் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-14)

## சைவ சித்தாந்த மாநாடு

தென்மராட்சி, மே 10

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தினர் ஏற்பாடு செய்துள்ள சைவ சித்தாந்த எழில் ஞானப் பெருவிழா இம்மாதம் 13 ஆம், 14 ஆம் திகதி சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டுக்கு, சங்கத் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா தலைமை வகிப்பார்.

இந்த மாநாட்டில் தமிழ் அறிஞர்களும், கல்விமான்களும் கலந்து சிறப்பிப்பர். (இ-5-117)

## கிராமிய உற்பத்திக் குழு முல்லைத்தீவில் சிரமதானம்

யாழ்ப்பாணம், மே. 10

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராமிய உற்பத்திக் குழுக்கள் பல்வேறு சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

சகல வட்டங்களிலும், மாதந்தோறும் இப்பணிகள் நடைபெறுகின்றன.

இந்த சிரமதானப் பணிகளில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பணியாளர்கள், உற்பத்திக் குழு உறுப்பினர்கள், அரசியல் துறையினர் ஆகியோருடன் மக்களும் இணைந்து பங்கு கொள்கின்றனர். (இ-5)

## கல்விப் பெறுபேறுகளில் முன்னேற்றம்

தென்மராட்சி மே 10

அண்மையில் வெளியாகிய க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின்படி கடந்த வருடத்தை விட இம்முறை சில பாடசாலைகளில் பதினைந்து வீதத்திற்கு அதிகமான அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாக தென்மராட்சி கல்விக் கோட்ட உதவிப் பணிப்பாளர் இ. கணேசன் தெரிவித்தார்.

சாவகச்சேரி மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம், கச்சாய் அ. த. க. பாடசாலை, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலேயே கல்வியில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (க-117)

# தமிழகத்தில் மழை; 12 பேர் மரணம்

தமிழ் நாட்டில் கடந்த 4 நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக 12 பேர் வரையில் உயிர் இழந்துள்ளனர்.

சென்னை நகரில் 5 பேரும் 2 பேர் கன்னியா குமரியிலும் இறந்துள்ளனர்.

இதேவேளை ராஜஸ் தான் மாநிலத்தில் அண்மையில் வீசிய அனல் காற்றினால் சிலர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-14)

# தமிழினத்தின் கலை கலாசாரத்துக்கு கலைஞர்கள் புத்துயிரூட்ட வேண்டும்

## மாதாந்த கலைவிழாவில் உரை

தென்மராட்சி, மே 10

தமிழ் இனத்தின் தனித்துவமான கலைகளையும் கலாசாரத்தையும் பாதுகாத்து அவற்றுக்கு புத்துயிர் ஊட்ட கலைஞர்கள் பாடுபட வேண்டும்.

முகமாலை இந்திரபுரத்தில் அண்மையில் நடைபெற்ற தென்மராட்சி கலை பண்பாட்டுக்கழகத்தின் மாதாந்த கலை விழாவில் கலந்து கொண்ட தென்மராட்சி கலை பண்பாட்டுக் கழக மாதர் பிரிவைச் சேர்ந்த திருமதி மனோன்மணி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், கலைஞர்களும் ஒரு வகையில் போராளிகளே அந்நிய நாட்டவன் எமது தேசத்தை அழிக்காமல் பாதுகாக்க போராடும் போராளி போல தமிழ் தேசம் அந்நிய நாட்டு கலை கலாசாரத்தினால் அழிந்து போகாமல் பாதுகாக்கும் பணியில் கலைஞர்கள் ஈடுபடுகிறார்கள். இதனாலேயே எமது தேசியத் தலைவரும் கலைஞர்களின் சேவைகளை பாராட்டிக் கௌரவித்து வருகிறார். என்றார்.

தென்மராட்சி கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் அன்பு உட்பட பலர் உரையாற்றினர்.

கூட்ட இறுதியில் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. (க-117)

**பனையை நாட்டியவர்கள் - இப் பாரினில் உயர்ந்தவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் கைதாகும் தமிழரை

# நீதிமன்றில் ஆஜர் செய்து உடன் விடுவிக்குக!

## ஆயர் கெனத் கோரிக்கை

கொழும்பு, மே 10

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறப் பகுதிகளிலும் பொலீஸாரினால் கைதாகும் தமிழர்களை கைதான 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றில் ஆஜர் செய்ய வேண்டுமென்று அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர் அதிவணக்கத்திற்குரிய கெனத் பெர்னாண்டோ அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதே வேளை கைதாகும் தமிழர்களை விடுதலை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் அவர் கொழும்பில் மேற்கொண்டுள்ளார்.

அங்கிலிக்கன் திருச்சபையில் இருந்து இதற்கென நிதி ஒதுக்கீடு செய்து சட்டத்தரணிகளை வைத்து கைதாகும் தமிழர்களை விடுவிப்பதற்கு அவர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிய வருகிறது. (ஒ-4)

# பல்கலை மாணவர் ஆர்ப்பாட்டப் பேரணி

## ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பினர்

யாழ்ப்பாணம், மே. 10

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்ட இந்தப் பேரணி நேற்று முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகியது.

பல்கலைக் கழகத்திலிருந்து ஆரம்பமான இப்பேரணி செயலகம் வரை சென்றது.

வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களையும் மருத்துவ பீடத்துக்கு அனுமதிப்பது என்ற ஜனாதிபதி சந்திரிகாவின் முடிவுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் மகஜர் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கென மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்மநாயகத்திடம் அங்கு வைத்து ஒப்படைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் முடிவுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாகவே பேரணியும் நடத்தப்பட்டது.

இதே வேளை, மருத்துவ பீட மாணவர்களின் வகுப்புப் பகிஷ்கரிப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கலை பீட மாணவர்களும் நேற்று வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர். (அ-7)

### படிவம் தராதவருக்கு நிவாரணமில்லை

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட டி. ஆர் 2 படிவங்களை நிரப்பிக் கொடுக்காதவர்களுக்கு இடம் பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு வழங்கப்படமாட்டாது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

புல்லுமலை முகாம் அருகே

# தமிழரைப் பலவந்தமாக மீளக் குடியேற்ற திட்டம்

மட்டக்களப்பு, மே. 10

மட்டக்களப்பு, புல்லுமலை இராணுவ முகாமை அண்டியுள்ள பகுதிகளில், தமிழர்களை பலவந்தமாக மீளக் குடியேற்ற ஸ்ரீலங்கா படையினர் திட்டமிட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

தமது பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு இராணுவத்தினர் இவ்வாறு திட்டமிட்டுள்ளதாக அறியவருகிறது.

இதே வேளை புல்லுமலை இராணுவ முகாமை அகற்றாத வரையில் அப்பகுதியில் மீளக் குடியேறமுடியாதென அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.


## மரண அறிவித்தல்

\+

### எம். எஸ். பொன்னுத்துரை

(Former Pons Dealers in Electricals & All Kinds of Tyre Etc. No 52/2 Stanley Rd, Jaffna )

சில்லாலையைச் சேர்ந்தவரும், தற்பொழுது கொழும்பில் வசித்தவருமாகிய எம். எஸ். பொன்னுத்துரை 04-05-95 கொழும்பில் காலமானார். அவர் மொணிக்காவின் அன்புக்கணவரும், மொறின் (கனடா) றொமின், ஸ்ரலின் (பிரான்ஸ்), மாலின், எலின், பேவின் ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், வரதன் (கனடா) காயத்ரி ஆகியோரின் அன்பு மாமனாரும், றஜித், சஞ்ஜித், வினோஜித் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் கொழும்பில் 6 05 95 சனிக்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டது இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

றோகினி எட்வேட் [மருமகள்]

பொன்னுத்தேத் செபஸ்தியாம்பிள்ளை (சகோதரி)

சோதிவேம்படி ஒழுங்கை,

மானிப்பாய். (36577)



## நன்றி செலுத்தும் வழிபாடும் அஸ்தி நல்லடக்கமும்

### திருமதி யோய்ஸ் இராசமலர் மில்ஸ்

28-4-95 கொழும்பில் காலமானவரும், மானிப்பாய் திருச்சபையின் நீண்ட கால அங்கத்தினரும், 14 வருடங்கள் தொடர்ந்து மானிப்பாய் திருச்சபையின் பொருளாளராகப் பணியாற்றியவரும் மானிப்பாய் Y'S Men, மற்றும் மானிப்பாய் Y M C A. யின் அங்கத்தவரும், காலஞ்சென்ற C. T. E மில்ஸ் அவர்களின் அன்பு மனைவியுமான

திருமதி **Joyce Rasamalar Mills**

(றீன் வில்லா, வைத்தியசாலை முன்பாக மானிப்பாய்) அவர்களின் வாழ்க்கைக்கு நன்றி செலுத்தும் வழிபாடு இன்று (10-5-95) புதன் மாலை 4 00 மணிக்கு மானிப்பாய் C S I. இல் நடைபெற்று, அன்னாரின் அஸ்தி மானிப்பாய் பிப்பிலி கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும் தயவுசெய்து அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

C S. I திருச்சபை

(36591) மானிப்பாய்


பலாலிப் பகுதி சுற்றிவளைக்கப்படவில்லை!

# வடபகுதியிலுள்ள படை முகாம்களில் உணவுக்குத் தட்டுப்பாடு இல்லை

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மே 10

வடபகுதியிலுள்ள எந்த ஒரு இராணுவ முகாமிலும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவவில்லை என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பலாலி முகாமில் ஆறு மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் இருக்கின்றன. இதற்கு மேலாக விசேட சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்கென 21 ஆயிரம் மூடை உணவுப் பொருள்கள் அங்கு இருப்பில் வைக்கப்பட்டுள்ளன.

பூநகரி முகாமில் ஐந்து மாதங்களுக்கும் —

தீவுப்பகுதியில் மூன்று மாதங்களுக்கும் —

முல்லைத்தீவு முகாமில் ஆறு மாதங்களுக்கும் —

ஆனையிறவு முகாம், வெற்றிலைக்கேணி முகாம் ஆகியவற்றில் இரண்டு மாதங்களுக்கும் —

போதுமான உணவுப் பொருள்கள் கையிருப்பில் உள்ளன.

கடந்த இரண்டு வாரங்களாக நிலவிய சீறற்ற கால நிலை காரணமாக இந்த இரண்டு முகாம்களிலும் உணவுப் பொருள்களை இறக்கும் வேலைகள் தடைப்பட்டன.

ஆனால் இப்பொழுது இந்த முகாம்களில் தொடர்ச்சியாக உணவுப் பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன.

அரிசி, பருப்பு, சீனி, கோதுமைமா, பால்மா, பயறு, கடலை, கருவாடு, ரின்மீன், தகரத்தில் அடைக்கப்பட்ட இறைச்சி, நெஸ்டோமோல்ற், ஜ‘ம், மார்மைற் ஆகிய பொருள்கள் இப்பொழுது கப்பல்களிலிருந்து இறக்கப்பட்டு வருகின்றன

உலகில் எந்த ஒரு பகுதியிலும் இராணுவ முகாம்களிலுள்ள இருப்புகள் பற்றி வெளியிடப்படுவதில்லை.

என்றாலும் பொது மக்களை தவறான வழியில் இட்டுச் செல்லும் வகையில் சில பத்திரிகைகளில் தவறான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதனால், இந்தச் செய்தியை வெளிக் கொணர வேண்டுமென்று தீர்மானம் எடுக்கப்பட்டது.

பலாலி முகாமில் கடுமையான உணவுத் தட்டுப்பாடு நிலவுவதாக அங்குள்ள கனிஷ்ட அதிகாரிகள் சிலர் பி. பி. ஸிக்கு தெரிவித்தார்களென பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டிருந்தன.

இந்தத் தகவலைத் தெரிவித்த வட்டாரங்கள் நம்பிக்கைக் குரியனவல்ல.

"திவயின" பத்திரிகையில் "நாங்கள் சுற்றிவளைக்கப்பட்டிருக்கிறோம்; எங்களைச் சுற்றிலும் புலிகள் நிற்கிறார்கள்!" என்ற தலைப்பில் வெளியான செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கின்றோம்.

தமது உயிரைப் பணயம் வைத்தேனும் நாட்டின் இறைமையைப் பாதுகாக்கத் தயாராயிருக்கும் ஆயுதப்படையினருக்கு இந்தச் செய்தி மரியாதைக் குறைவானதும் அவமதிப்பை ஏற்படுத்துவதுமாகும்.

எந்த ஒரு நிலைமையையும் எதிர் கொள்ள அவர்கள் பயிற்றப் பட்டிருக்கிறார்கள், அவர்களது தார்மீக நிலை மிக உயர்வாக இருக்கின்றது.

பலாலி இராணுவ முகாம் சுற்றிவளைக்கப் படவில்லை. தற்காலிகமாக விமானசேவை நிறுத்தப்பட்டிருப்பது தவிர, வேறு சகலவழிகளிலும் முகாமுடன் தொடர்புகள் இருந்து வருகின்றன.

எந்த ஒரு காரணத்துக்காகவும் இராணுவம் தனிமைப் படுத்தப்படவோ ஏமாற்றப் படவோ மாட்டாது என்று ஜனாதிபதி உறுதியாகத் தெரிவித்திருக்கிறார். முகாம்களிலுள்ள ஆயுதப் படைகளின் அவசியம் குறித்து மிகவும் அக்கறை கொண்டுள்ள ஜனாதிபதி படைகளின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளார். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-7)

### உண்ணாவிரதம் இருக்க முடிவு

யாழ்ப்பாணம், மே 10

தற்போது வழிமறிப்புப் போராட்டம் நடத்தி வரும் யாழ். மருத்துவபீட மாணவர்கள் அதனைத் தீவிரப்படுத்தி உண்ணாவிரதப் போராட்டமாக நடத்த முடிவு செய்திருக்கின்றனர் என்று மருத்துவபீட மாணவர் ஒன்றியம் நேற்று நள்ளிரவு அறிவித்தது.

இன்று காலை 9 00 மணி முதல் மருத்துவபீட மாணவர்கள் ஐந்து பேர் தொடர்ச்சியாக 5 நாட்கள் நீர் மாத்திரம் அருந்தி உண்ணாவிரதம் இருப்பர் என்றும்—

இவர்களுக்கு ஆதரவாக ஏனைய மாணவர்கள் சுழற்சி முறையில் உண்ணாவிரதம் இருப்பர் என்றும் அறிவிக்கப்பட்டது. [உ]

### விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 10

அரியாலை சனசமூக நிலைய 46 ஆவது ஆண்டு விழாவை ஒட்டி நடைபெறும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3-00 மணி: - அரியாலை ஐ.வி.க. "பி" அணி எதிர் சன்றைஸ் வி.க. அணி.

★ 4-00 மணி:-கொய்யாத்தோட்டம் ஐ.வி.க. அணி எதிர் நல்லூர் ஸ்புட்னிக் வி.க. 'பி' அணி.

★ ★ ★

யாழ். உதைபந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன்— எஸ்.ஏ.என். அன்ரன் நிறுவன ஆதரவில்—அமரர் ச செபஸ்தியாம்பிள்ளை ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்காக நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3-00 மணி:- சென் நிக்கலஸ் வி.க. எதிர் அளவெட்டி இளைஞர் வி.க.

★ 4-00 மணி:- தாயகம் வி.க. எதிர் ஞானமுருகன் வி.க.

★ ★ ★

ஜெ லிஸ்ரார்ஸ் கிண்ணத்துக்காக ஈ. எஸ் பேரம்பலம் சக நிறுவனத்தின் ஆதரவுடன் ஜெ லிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதல் நாள் ஆட்டங்கள் நாளை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

இந்த ஆட்டங்கள் இன்று நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (ச-20)

# படையினர் அஸ்தியை பெற மறுக்கும் உறவினர்!

கொழும்பு, மே 10

வடக்கு வான்பரப்பில் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதில் கொல்லப்பட்ட படையினரின் அஸ்திகளைப் பெற அவர்களின் உறவினர்கள் மறுத்துவருகின்றனர்.

மேற்படி அஸ்திகள் தமது உறவினருடையது என்பதற்கு ஆதாரம் என்ன?

இவ்வாறு உறவினர்கள் கேட்டு அஸ்திகளைப் பெற மறுத்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ—7)

# நல்லூரில் நெசவுப் பயிற்சி

யாழ்ப்பாணம். மே 10

புடைவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் நடத்தப்படும் ஈராண்டு காலப் பயிற்சிநெறி (95-97) நல்லூரிலுள்ள அரசினர் நெசவுப் பயிற்சி பாடசாலையில் நடைபெற உள்ளது

கணிதம், தமிழ் உட்பட ஜி சி ஈ சாதாரண தரப் பரீட்சையில் இரு கலைகளில் சித்தி பெற்ற இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் என்றும் —

பயிற்சிக் காலத்தில் நாளொன்றுக்கு 30 ரூபா அலவன்ஸும், சீருடையும் வழங்கப்படும் என்றும். அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர் 18 - 30 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும் விண்ணப்ப முடிவு திகதி எதிர் வரும் 31 ஆகும்.

மேலதிக விபரங்களுக்கு நல்லூர் நெசவுப் பயிற்சிப் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் அரச அதிபர் கேட்டுள்ளார். (ஒ-4)

### 4 தாக்குதல் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கப்பல் மூலமாக ஸ்ரீலங்கா வந்தடைய சுமார் இரண்டு, மூன்று மாதங்கள் காலதாமதமாகும் என்பதால் —

அதுவரை வடக்கு — கிழக்குப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவுள்ள இராணுவ நடவடிக்கைகளின் போது பயன்படுத்துவதற்காகவே இந்த நவீனரகத் தாக்குதல் விமானங்களும் கடற்படைக் கப்பல்களும் இந்தியாவினால் அவசர உதவியாக — இரவலாக — வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மிகக் குறுகிய காலத்திற்குள் இந்த யுத்த உபகரணங்களை இந்தியாவிலிருந்து உதவியாகப் பெற்றுக்கொள்வதற்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளமுடியும் எனத் தெரிவித்த பாதுகாப்புத்துறைச் செய்திகள் —

அரசினால் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டு, வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்படவுள்ள தாக்குதல் விமானங்களும் கடற்படைக் கலங்களும் இங்கு வந்து சேர்ந்ததும் இந்தியா தற்போது இரவலாகத் தந்துதவும் விமானங்களையும் கடற்படைக் கலங்களையும் மீண்டும் இந்தியாவிடம் கையளிப்பது என்ற நிபந்தனையின் அடிப்படையில் அவற்றை இந்தியாவிலிருந்து பெற அதிக வாய்ப்புள்ளதாகக் குறிப்பிட்டன

— இவ்வாறு அந்தப் பத்திரிகை [illegible] [உ-10]

### புலிகளின ---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ததாகவும் —

அப்போது நிலவிய அமைதி நிலை காரணமாக அந்தப் புகைப்படங்கள் தொடர்பான பிலிம்களைப் பறிமுதல் செய்துவிட்டு அந்த அறுவரையும் விடுதலை செய்ய வேண்டிய நிலைக்கு பொலீஸார் தள்ளப் பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மீண்டும் இந்த இடங்களை படம் எடுப்பதற்கு வெளிநாட்டு மற்றும் சிங்கள இளைஞர்களுக்கு விடுதலைப் புலிகள் பணம் செலுத்தியதாக பொலீஸ் புலனாய்வு வட்டாரங்கள் குறிப்பிட்டன.

அதேவேளை —

கொழும்புத் துறைமுகம் கடற்புலிகளின் இலக்காகக் கூடும் என்பதால் அங்கு கடற்படையினரும் துறைமுகப் பாதுகாப்புப்பிரிவினரும் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### தற்கொலைப---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் பலர் அதில் சேர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதாகவும் முன்னாள் படை அதிகாரிகள் சங்கப் பிரமுகர்களில் ஒருவரான மேஜர் கருணரத்னா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு சங்கத்தின் சார்பில் எழுதிய கடிதத்தில் கூறியுள்ளார்.

தற்கொலைப் படையில் சேரத் தாமாக முன்வருபவர்களை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் மேஜர் கருணரத்னா தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் முகாம்கள் மீது தாக்குதல் நடத்தக்கூடிய தற்கொலைப் படையில் சேர்வதற்கு தென்மாகாணத்தில் பணிபுரியும் அதிரடிப் பொலீஸாரில் பலர் விருப்பம் தெரிவித்துள்ளதாகக் கூறி —

நேற்றைய "லங்கா தீப" பத்திரிகை ஒரு பட்டியலை வெளியிட்டது. (அ-6-7)

### வானொலி---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உத்தரவுப் பத்திரம் இன்றி வானொலிப் பெட்டிகளைக் கையாள்வது அல்லது பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-7)

ரூபவாஹினி தலைவர் பதவியிலிருந்து

# வசந்தராஜா ராஜினாமா; அரசை சாடுகிறார் அவர்

எதிர்பார்க்கப்பட்டபடி ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் வசந்தராஜா தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

அரசு — புலிகள் மோதல் மீண்டும் வெடித்ததை அடுத்து —

ரூபவாஹினியின் — பதிவு செய்யப்படாத — நேரடி ஒளிபரப்புகளை நிறுத்தும்படி பாதுகாப்பு அமைச்சு பணித்ததாகவும் —

இந்தத் தலையீட்டை ஆட்சேபித்தே தமது தலைவர் பதவியை வசந்தராஜா இராஜினாமாச் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வெகுஜன தொடர்பு சாதனங்கள் சுயாதீனமாக இயங்க அனுமதிக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஆட்சிக்கு வந்த பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு.

அந்தக் கோரிக்கையைக் காற்றில் பறக்க விட்டுவிட்டது என்று வசந்தராஜா குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை—

வசந்தராஜா ராஜினாமாச் செய்ததால் ஏற்பட்டுள்ள ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் பதவிக்கு சுயாதீன தொலைக்காட்சிச் சேவையின் (ஐ. ரி. என்) தலைவரான டியூ. குணசேகராவை நியமிப்பது என அரசு தீர்மானித்திருப்பதாகக் கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது. [உ-6-10]


## அகில இலங்கை கம்பன் கழகத்தின் கம்பன் விழா - 1995

### இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் (10-05-1995) புதன்கிழமை

காலை 9.30 மணி முதல்

மங்கள விளக்கேற்றல் "சிற்பச் சக்கரவர்த்தி"
திரு ஆ. ஜீவரத்தினம் அவர்கள்

கடவுள் வாழ்த்து சங்கீதவித்துவான்
திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் அவர்கள்

கம்பன் வாழ்த்து

வரவேற்புரை

தலைமையுரை
திரு சு. இரத்தினராசா B.A. அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், உடுவில் கோட்டம்)

வாழ்த்துரை
திரு செ. சிவழகாராசா அவர்கள்

ஆய்வரங்கு

தலைவர்:
திரு. க. சிவராமலிங்கம் B A அவர்கள்

ஆய்வுப்பொருள்:
"சங்கமும், கம்பனும் இயற்கையைக் கையாண்ட விதம்"

ஆய்வாளர்
பண்டிதர் க. சச்சிதானந்தன்

மாலை 4.30 மணி முதல்

மங்கள இசை
திரு. பி எஸ். பிச்சையப்பா, ரவி, ரஜி குழுவினர்

மங்கள விளக்கேற்றல்
திரு திருமதி சிவஞானம் அவர்கள்

கடவுள் வாழ்த்து சங்கீதவித்துவான்
திருமதி மேரி சறோஜா ஜஸ்ரின் அவர்கள்

கம்பன் வாழ்த்து

வரவேற்புரை

தலைமையுரை வைத்திய நிபுணர்
திரு. வி. கருணாகரன் அவர்கள்

தொடக்கவுரை
வண. பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகள்
(தலைவர், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை)

வாழ்த்துரை
திரு. அ. பஞ்சலிங்கம் B.Sc. அவர்கள்
[அதிபர், யாழ். இந்துக்கல்லூரி]

நூல் வெளியீடு
"கம்ப மலர்"

வெளியீட்டுரை
திரு ஆர் எஸ். நடராஜா M.A. அவர்கள்
(ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி)

திறப்புரை
திரு வே பொ. பாலசிங்கம் அவர்கள்
(ஆணையாளர், யாழ். மாநகரசபை)

### ★ பட்டிமண்டபம் ★

நடுவர் திரு. இ. ஜெயராஜ்

பொருள்

குறள் நெறியில் அயோத்தியா காண்டத்தின் ஊடு பொருளாய்க் கம்பன் கொண்டது

இல்லறச் சிறப்பே! — துறவற மேன்மையே!

திரு. இரா. செல்வவடிவேல் — திரு. தி. திருநந்தகுமார்
திரு. ஆறு திருமுருகன் B.A. — திரு க. குமாரதாசன்
திரு. க. ஜெயநிதி — திரு ச. மணிமாறன்

ஊழின் வலியே!

திரு த சிவகுமாரன்
திரு த. சிவசங்கர்
திரு ஸ்ரீ. பிரசாந்தன்

நோக்கர் குழுத் தலைவர்
திரு. இ. மகேந்திரன் B.A. அவர்கள்
(அதிபர், கொக்குவில் இ.க.)

நோக்கர்கள் வாக்களிப்பின் மூலம் ஓர் அணியை விலக்கல்.

நடுவர் தீர்ப்பு.

குறிப்பு:

பட்டிமண்டபத்தின் நோக்கர்களாகக் கடமையாற்றும் அனைவரையும் இன்று மாலை விழாவிற்கு வருகைதருமாறு வேண்டுகிறோம்.

[சி/1182]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 892/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 10 05 · 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது